# சத்திய வேத பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA. 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது. Telephone: No. 300.

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

84-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1959-ம் ஆண்டு வைகாசி மாதம் 7-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 17-ம் இலக்கம்

## அர்ச். சூசையப்பரின் சிறியநாய் அந்திரே பிறதர்

*[இஃது சஞ்சூசையப்பர்சபைச் சந்நியாசர்களில் ஒருவராயிருந்து காலஞ்சென்ற சங். பி. இஞ்ஞாசிமுத்து, S. S. J. பிறதர்அவர்களால் தமிழாக்கஞ் செய்யப்பெற்றது.]*

(முன்தொடர்ச்சி)

அந்திரேபிறதர் வழியாகவே நாங்கள் மனந்திரும்பி நல்வழிப்பட்டோம்என்று அநேகர்சொல்வார்கள். அவர்களில் ஒருவரது வாக்குமூலம் வருமாறு: "ஓர் தயவுபெற்றுக்கொள்ளும் பொருட்டுப்பிறதர்அந்திரேயிடஞ் சென்றேன். சருவேசுரனுடைய நேசத்தைக்குறித்து எத்துணை மனவருட்சியானவிதமாக எனக்கு உபதேசித்தாரெனில், வேதாநுசாரத்தைக்குறித்து என்னிடங் குடிபுகுந்திருந்த தப்பிதமான அபிப்பிராயம் முற்றாகக் குடியெழும்பிவிட்டது. ஒருவன் தான்சாவானபாவஸ்திதியிலே இருப்பதை உணர்ந்தும் உணராதவன்போலே ஆண்டாண்டாகச் சீவிக்கக்கூடும் என்று தெளிந்துகொண்டேன். எவ்வளவிலே நான் கிறீஸ்தவனுக்குரிய எனது கடமைகளை உற்றுணர்ந்துஅநுட்டிக்க என்னை உடன்படுத்திவிட்டாரெனில், தற்போது நான் திவ்வியதிருப்பந்தியிலே அநுதினமும் அமர்ந்துவருகின்றேன்; என்னைச்சூழ உள்ளாரெல்லாம் சருவேசுரனை நேசித்துவரும்படிசெய்ய இயன்றவரை உழைத்துவருகின்றேன்" என்பதே மேற்குறித்த வாக்குமூலம்.

திருச்சிலுவைச்சபைக் கல்லூரிப் பழையமாணவன் ஒருவன் இருபது வருடகாலமாக வேதாநுசாரமின்றிச்சீவித்து ஈற்றிலே அசாத்திய நோய்வாய்ப்பட்டுப் பாயும்படுக்கையுமானான். அவன் குடும்பத்தார் அவனுடைய நித்தியஇரட்சணியம் அபாயகரமான நிலையிலிருப்பதை நினைந்து இறுதிவேளையிலேயாயினும் அவனை மனந்திருப்பிவிட இயன்றமட்டும் பிரயாசப்பட்டும், அவர்கள்பட்ட பிரயாசமெல்லாம் அவமாகப் போனமையால், அந்திரேபிறதருடைய ஆதரவைத் தேடினார்கள். அவர் அவனிடம் போய்: "நன்மரணம் அடைய நல்லாயத்தம்செய்வது அவசியம்; அன்புந்தயவும் நிறைந்த ஆண்டவராகிய யேசுநாதர் உனதுஅக்கிரமங்களை மன்னிப்பாரோ என்று அவநம்பிக்கைப் படவும், அஞ்சிக்கலங்கவும் வேண்டாம் பெரும்பாவியாகிய நல்லகள்வனுக்குப் பொறுத்தல் அளித்தவர் உனக்கும் பொறுத்தல் அளிப்பார்என்னுஞ் சாரம்அமையச் சமயோசிதமான சற்புத்தியூட்டி, சருவேசுரனுடைய கரைவரையில்லாக் கருணையையும், இரட்சகர்பட்ட திருப்பாடுகளையும் இனிதாக விளக்கிக்காண்பித்து, சஞ்சூசையப்பர் பதக்கத்தை அவனுக்குக்கொடுத்துத் தாமதம் பண்ணாமல் ஒருகுருவானவரைக் கூப்பிடுவிக்கும்படி ஏவினார். உள்ளம் இளகிய நோயாளி கன்னம் இரண்டாலும் கண்ணீர் வார: அந்திரேபிறதர் எந்தக்குருவானவரை அனுப்புவாரோ அந்தக்குருவானவரையே தான் ஏற்றுக்கொள்ளுவதாக வாக்குக்கொடுத்தான். பிறதர் தாம் தெரிந்து அனுப்பிய குருப்பிரசாதியானவர் அவனுடைய பாவசங்கீர்த்தனத்தை ஆனமட்டும் எளிதாக்கும்படியும், அற்பமேனும் அவனுக்குக் கண்டிப்புக் காண்பிக்காதபடியும் அவரிடம் தயவாகக் கேட்டுக்கொண்டனர்.

வியாதிப்பட்டுக்கிடந்த ஓர்வாலிபன் விசுவாசம் அற்றவனும், ஒழுக்கங்கெட்டவனுமான கடின பாவியாக இருந்தான். அவனை மனந்திருப்புதற்கு அந்திரேபிறதரே தகுந்தவர் என்று எண்ணிய விசாரணைக்குருவானவர் அவரை அவனிடம் போக்கிவிட்டார். பிறதர் அவன்கிடந்த அறையுட் பிரவேசித்தபோது அவனைப்பார்க்கினும் அதிவருத்தவாளிகளாயிருந்த அநேகரைச் சூசையப்பர் பதக்கங்கொண்டு தாம் சொஸ்தப்படுத்திவிட்டதாகச்சொல்லி அந்தப் பதக்கத்தினாலே அவன்தேகத்தை உரச அவன் உடன்படும்படி கேட்டுக்கொண்டார். அவன் படுத்திருந்த மஞ்சம் பதிவானதாக இருந்தமையால், அதன் பக்கலிலே முழந்திநின்றார். உடனே வியாதிஸ்தன் தன் இருகையாலும் அவர்கழுத்தைக் கட்டிக்கொண்டு தன்னோடு அவரை அரவணைக்க முயன்றான். பிறதர் "என் இளைஞனே நீ என்வசமானாய்" என்று தனக்குட்சொல்லிக் கொண்டார். வாலிபன் ஆச்சரியகரமானவிதமாய் மனந்திரும்பிப் பாக்கியமான மரணமடையலானான்.

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

## வணக்கமாதமும் பிள்ளைகளின் மன்றாட்டும்

பூலோகமாகிய இக்கண்ணீர்க் கணவாயிலே சஞ்சரிக்கின்றநாம் எமது ஆபத்துஅவசியங்களிலெல்லாம் பரலோகத்தை ஏறெடுத்து "மிகவும் இரக்கமுள்ள தாயே" என்று அபயமிட்டு உதவிக்கு ஓடிப்போகின்ற பரிசுத்ததேவதாயாரின் வணக்கமாதமாகிய வைகாசிமாதம் உதயமாகியது. சூரியனின் உதயத்தாலே தாமரைகள் மலர்வதுபோன்று மாதாவின்வணக்கமாத உதயத்தாலே நமது இதயகமலங்களும் மலரவேண்டும். அங்ஙனம்மலரும் நமது இதயபுஷ்பங்களை இயற்கைப் புஷ்பங்களுடன் மாதாவின் பாதாரவிந்தங்களில் சாத்தவேண்டும். மதுவுண்டுகளித்த வண்டினங்கள்போன்று நாமும் மாதாவின்அனுக்கிரக மதுவுண்டுகளித்துத் தோத்திரகானம்பாடவேண்டும். மாலைமாலையாகச் செபமாலைசெபித்து அவர்பாதகமலங்களிற் சூடவேண்டும்.

வைகாசிமாதம் மாதாவின் பிள்ளைகளுடையமாதம். அவரின் பிள்ளைகளுக்கெல்லாம் பாக்கியமானமாதம். ஆகவே, இதனைப் பக்திச்சிறப்பாய்க் கொண்டாடுவதைக்காண்பது மாதாவில் நாம் கொண்டுள்ள பக்திக்கு ஓர்உரைகல் போன்றதாகும். அமைதியைக்காணாது, சமாதானத்தைக் கண்டுகொள்ளாது அலைகடல் போன்று நிலைகலங்கிக் கொண்டிருக்கும்இன்றையஉலகம் அவற்றைக்கண்டுகொள்ள வேண்டுமானால் அவரது ஞானப்பிள்ளைகளெல்லாம் மாதாவையே சரணடையவேண்டும். அவைகளைக் கண்டடையுமாறு மாதாவை இடையறாது பக்தியுருக்கமாக மன்றாடவேண்டும். அவர்களிலும் சிறுபிள்ளைகள்தான் அதிகமாக மன்றாடவேண்டும். இவர்கள் சீவியத்தின் புஷபகாலத்தில் இருக்கின்றார்கள். இவர்களிடம் பரிசுத்ததனமும், இன்பமும், அருளும் கமழ்கின்றன.

வைகாசிமாதத்தில் ஓர்சிறந்த வழக்கமுண்டு. பெற்றோர்கள் தங்கள்பிள்ளைகளை அழைத்துக் கொண்டு தேவதாயின் பீடத்தையணுகித், தங்கள்பிள்ளைகளையும், புஷ்பங்களையும், செபங்களையும் தேவதாய்க்கு அர்ப்பணம்செய்வது வழக்கம். இவர்கள்எல்லோரும் ஒன்றுசேர்ந்து தனிப்பட்ட மனிதர்களுக்கும், சனசமூகங்களுக்கும், தேசங்களுக்கும் சமாதானம்கொடுக்கும்படி மன்றாடும்போது தேவதாயார் எப்படிச் செவிசாய்க்காதிருக்கமுடியும்?

பூலோக சம்மனசுகள் என்று சொல்லத்தகும் சிறுபிள்ளைகளின் மன்றாட்டுப் பரலோக சம்மனசுகளின் மன்றாட்டுடன் ஒன்றிக்கும்போது தேவதாய் எப்படிக்கேளாதிருக்கக்கூடும்? இத்தனை செபங்களையும்கேட்கும் பரமனின் கன்னித்தாய் உலகம்முழுவதும் அஞ்சிக்கவலையுறும் இவ்வேளையில் தமது உபகாரசகாயங்களைத் தந்தருளுவாரென்பது நிச்சயம். பாவஅக்கிரமங்களால் மனம்நொந்த தமது திருக்குமாரனைச் சாந்தப்படுத்தி, மக்கள்கவலையை நீக்கி, இருதயசமாதானமும், ஐக்கியமும் அவர்களிடம் தோன்றும்படி அவரிடம் வரம்பெற்றுதவுவார்.

நமது திவ்வியஇரட்சகர் இவ்வுலகில் வசித்தபோது சிறுவர்களை மிகவிசேஷஅன்புடன் நேசித்தார். பிள்ளைகள் அவரைஅணுகவொட்டாது அப்போஸ்தலர்கள் தடுத்தபோது "சிறுவர்களை நம்மிடம் வரவிடுங்கள்... ஏனெனில், பரலோக இராச்சியம் அப்படிப்பட்டவர்களுடையது" (மார்க். 10-14) என்றுமொழிந்தார். தங்கள் மாசற்றகரங்களை உயர்த்தித் தம்மையும், தமது திருத்தாயாரையும் மன்றாடும் இப்பிள்ளைகளின் செபங்களைவிட வேறெந்தச்செபத்துக்கு அவர் இரங்குவார்.

மகாசிங்கராய பாப்பரசர்சொல்வதுபோல, கிறீஸ்துவானவர் தாமே தமதுசரீரத்திலும், ஆத்துமத்திலும் முதன்முதல் ஏற்றுக்கொண்ட பாலத்துவத்தை நேசிக்கிறார்; தாழ்ச்சியின் மாதிரிகையாகவும், பரிசுத்த தனத்தின் ஒழுங்காகவும் இருக்கும் பாலத்துவத்தைக் கிறீஸ்துவானவர் நேசிக்கிறார். பட்டணங்களிலும், கிராமங்களிலும், குக்கிராமங்களிலும் எங்கெங்கு சுவிசேஷத்தின் வெளிச்சம் பரவியிருக்கிறதோ அங்கெல்லாம் பிள்ளைகள்கூட்டங்கூட்டமாகக் கோவிலுக்குச் செல்வார்கள். ஆதலால், விரோதம் ஒழிந்து, பகைவர்கள் சமாதானப்பட்டு, குரோதம் சாந்தமடைந்து விளங்கும் நல்லகாலம் நமதுதேவதாயின் சகாயத்தால் தோன்றுவதாக!



# பல தேசங்களில்

## இந்தியபிரதமரும் தொழுநோயாளர்விடுதியும்

இந்தியபிரதமர் பண்டிதநேருஅவர்கள் சென்றமாதம்16-ந்திகதியன்று தூத்துக்குடிக்கு விஜயஞ்செய்திருந்தபோது, அந்நகர்முழுவதும் ஒருங்கே திரண்டெழுந்து ஓர்தேசத்தின் அரசாங்கதலைவ ரென்றமட்டிலே அவருக்குத் தகுதிவாய்ந்த ஓர்சிறந்த வரவேற்பு அளிக்கலாயிற்று. தூத்துக்குடிமேற்றிராணியாராகிய மகாவந். தோமஸ் பர்ணண்டோ ஆண்டவர் மேற்றிராசனத்தின் நாமத்தினாலே ஆசனக் கோவிலுக்குச்சமீபமாக அவருக் குமாலை சூட்டிநின்றார். வண. யோசெவ் ரேச்சுவாமியார் 250தொழுநோயாளர்—அதாவது குஷ்டரோகர்களின் நாமத்தினாலே அவருக்குமாலைசூட்டினர். ஆயினும்சுவாமியார் அத்துடன் திருப்திபடாது முத்துக்களுக்குப் பெயர்போன தூத்துக்குடியை நினைவுகூரத்தக்கதான ஞாபகசின்னம்ஒன்றையும் பிரதமர் தம்முடன்கொண்டுசெல்ல வேண்டுமென ஆசித்தார். முத்துக் குளிப்பும் தூத்துக்குடியிலே நடந்து மூன்றுமாதங்களாக நடைபெற்றுவருகின்றது. ரேச்சுவாமியார் சமீபத்திலே பத்துரூபாவுக்கு முத்துச்சிப்பிகள்வாங்கி அறுத்துப்பார்த்தபோது அவற்றிலே250ரூபாபெறு மதியான விலைபெற்றமூன்றுமுத்துக்களைக் கண்டடையும் அதிர்ஷ்டத்தைப்பெற்றார். இந்தமூன்றுமுத்துகளும் அழகாகப் பதிக்கப்பெற்ற தங்கமோதிரம்ஒன்றை மேற்றிராணியாண்டவர் பிரதமருடன் நடத்திய பிரத்தியேகசம்பாஷணையின் போது அர்ச். சூசையப்பர் தொழுநோயாளர்விடுதியின் ஞாபகசின்னமாக அவருக்குச்சமானிக்கலாயினர். இந்தியபிரதமர் அத்தகைய ஓர்அழகான வெகுமானத்தைதப்பெறுவதை யிட்டுப் பெரும்பிரமிப்பும், மகிழ்ச்சியும், அடைந்தவராய் விலைபெற்ற அந்தஞாபகசின்னத்தை வழங்கியதற்காக விடுதியைக்கொண்டு நடத்துகிறவர்களுக்கும், அதில் இருந்துவரும் நோயாளருக்கும் பெரிதும்நன்றிதெரிவித்தார்.

## சூரியனின் பெரும் புள்ளிகள்

இதுவரை சூரியனில்காணப்படாத இருபெரியபுள்ளிகளைச் சமீபத்திலே பிரித்தானியமக்கள் கண்டு அதிசயித்தார்கள். இந்த ஒவ்வொரு புள்ளியும் ஒருலட்சம்மைல் குறுக்களவுடையதாகும். அதாவது: பூமியின் குறுக்களவைப்போல நான்குமடங்காகும். சூரியனிலுள்ள ஒருபுள்ளியின்மீது உஷ்ணஆவி கறுப்புநிறமாகத் தெரிகிறது. சூரியனின்புள்ளிகளில் 4,000 டிக்றி உஷ்ணம் காணப்படுவதாகவும், சூரியனிலே புள்ளிகளில்லாத இடங்களில் 6,000 டிக்றிவரை உஷ்ணம்காணப்படுவதாகவும் வானசாஸ்திரிகள் கூறுகிறார்கள்.

இந்தப்புள்ளிகள் சூரியனின் வெப்பநிலையிலே பெரும்புயல்களை ஏற்படுத்தியுள்ளன. சூரியனுள்ளே ஏற்பட்டுள்ள இப்புயல்கள், 11 வருடங்களுக்கு ஒருமுறை சக்கரத்தைப்போலச் சுற்றிக்கொண்டு வருகின்றனவென்பதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளார்கள். சூரியன்மீது அடிக்கடி ஏற்படும் மாறுதல்களை அவதானித்து வந்ததின் விளைவாகவே இந்தஇரகசியம் கண்டுபிடிக்கப்பட்டது. சூரியனில் புள்ளிகள் உண்டென்பதைச் சீனர்கள் கி. மு. 107-ம்ஆண்டிலேயே கண்டுபிடித்தார்கள். வானவியல் நிபுணர்கள் முதன்முதலாகச் சூரியபுள்ளிகளைக் கண்டுபிடித்தபோது, அவை சூரியன் மீது காணப்படும் சிலவெடிப்புகளென்றுகூறிச் சில விஞ்ஞானிகள் இண்டல்செய்தார்கள். ஆனால், பின்னர் மறுக்கமுடியாதபடி தூரதிருஷ்டிக்கண்ணாடிகள் உண்மையை எடுத்துக்காட்டிவிட்டன.

## நாயர்களின் போர்க்கோலம்

கோளத்திலே கம்யூனிஸ்தஆட்சிக்கு எதிராக இதுவரைகாணாத பிரமாண்ட ஆர்ப்பாட்டம் சமீபத்திலே தக்காழிக் கிராமத்தில் நடந்தது. அம்பலப்புழை, குட்டநாடு தாலுகாக்களைச்சேர்ந்த நாயர்சமூகசேவைக் கழகங்கள்சேர்ந்து இந்தஆர்ப்பாட்டத்தை நடத்தின. நாயர்சமூகத்தினரின் தனிப்பெருந்தலைவரான மன்னத்பத்மனுபன் உப்பங்கழியிலே அலங்காரமாளிகைமீது பவனிவந்தார். இதைத்தொடர்ந்து ஒருமைல் நீளத்துக்கு மோட்டர்படகுகளும், நாகப்படகுகளும் வந்தன. கரையிலிருந்து காந்திநகர் மைதானத்துக்கு மயில்ரதத்தில் யானைகள் பின்தொடர ஊர்வலமாக அழைத்துவந்தனர். அங்கு லட்சம்பேருக்கு மேல் திரண்டிருந்த கூட்டத்தில் ஸ்ரீமன்னத் பத்மனுபன் பேசுகையில், “கேரள அரசாங்கம் மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டது; அது கவிழும்நாள் வெகுதூரத்தில் இல்லை; அவர்கள் முதல்தர தேசத்துரோகிகள்; சுதந்திரப் போராட்டகாலத்தில் பிரித்தானியரை ஆதரித்தார்கள்; இப்போது திபேத்துப்பிரச்சினையில் சீனுவை ஆதரித்து மக்களின் ஆத்திரத்துக்கு ஆளாகியிருக்கிறார்கள்; நாயர் சமூகத்தினரின் ஆதரவுதான் கம்யூனிஸ்தர்கள் பதவிக்குவந்ததற்கு முக்கியகாரணம் என்பதை அவர்கள் மறந்திருக்கமுடியாது; கல்தாகொடுத்துத் தள்ளிப் போகாதிருக்க வேண்டுமென்றால் கம்யூனிஸ்த அரசாங்கம் மரியாதையாக இராஜிநாமாச்செய்யட்டும்” என்று எச்சரித்தார்.

## இரத்ததான அப்போஸ்தலத்துவம்

இரத்ததானம் செய்கிறவர்கள் தக்ககருத்துடன் அதனைச்செய்யுமிடத்து அவர்களின்இரத்ததானங்கள் உண்மையாகவே இயற்கைக்கு மேற்பட்டவையென்று அவர்களுக்கெல்லாம் பரிசுத்தபாப்பாசர் உறுதிபகர்ந்திருக்கின்றார். “இரத்ததானம் செய்கிறவர்களின்சேவை ஓர்அப்போஸ்தலசேவையேயென்று சொல்ல நாம் தயங்குவதில்லை; ஒருவாது நோய்வாய்ப்பட்டுவருந்தும் அயலானின் ஆத்மீக, சரீர சுகசேமத்திற்கான சேவையிலேயே உள்ளபடி அதுசெய்யப்பட்டிருக்கிறது; இந்தச்சேவை பலமுறைகளிலும் திரும்பஇட்டுக்கொள்ள முடியாத இரட்சணியநங்கூரமாகவும், தேவபராமரிக்கையிலே மீட்டும்புதுப்பிக்கப்படும் நம்பிக்கைக்கு ஓர்தூண்டுதலாகவும் இருக்கின்றது; எத்தனை சீவன்கள் காப்பாற்றப்படுகின்றன; எத்தனை சஞ்சலங்கள் தடுக்கப்படுகின்றன; ஆஸ்பத்திரிகளின் அமைதியிலும், அங்கலாய்ப்புடன் காத்துக்கொண்டு நிற்கும் குடும்பங்களிலும் எத்தனை நம்பிக்கை திரும்பவும் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது; ஆகவே, உங்களதுசேவை உண்மையான ஓர்அப்போஸ்தலத்துவமாகும்; ஆனால், அது தன்னுடைய நிறைவை அடையவேண்டுமானால் பிறர்சிநேகத்தின்மேல் அஸ்திபாரமிடப்படவேண்டும்; பிறர்சிநேகத்துடன் கொடுபடும் ஒரேயொருதுளி இரத்தந்தானும் தேவனுடையகண்களில் இயற்கைக்குமேற்பட்ட விலை மதிப்பைப் பெற்றுக்கொள்ளுகின்றது” எனப் பாப்பாசர்கூறலாயினர்.

## முப்பதுஆண்டுகளுக்குப்பின் முதன்முறையாக

1930-ம்ஆண்டிற்குப்பின் முதன்முறையாக ஆட்சிபுரியும் பாப்பரசர் ஒருவர் வருகிறஆடிமாதம்1-ந்திகதியன்று திருமணவைபவம்ஒன்றை நிறைவேற்றிவைக்க விருக்கின்றார். அன்று தினம் அருளப்பபாப்பாசர் பெல்ஜியதேச அல்பேட்இளவரசரினதும், பவோவா ருவ்வி டீ கலாபிறியாஇளவரசியினதும் திருமணத்திருச்சடங்கை நிறைவேற்றிவைப்பார். இது வத்திக்கானிலுள்ள பவுலின்சிற்றாலயத்தில் நடந்தேறவிருக்கிறது. 11-ம்பத்திநாதபாப்பானவர் தமது மருகிக்கும், இத்தாலிய மாக்குயிஸ்பிரபுவுக்கும் திருமணச்சடங்கை நிறைவேற்றிவைத்தபோதுதான் கடைசிமுறையாகப் பாப்பாசர் ஒருவர் திருமணம் ஒன்றை நிறைவேற்றிவைத்தார். அல்பேட்இளவரசர் பெல்ஜியசிம்மாசனத்துக்குரிய வரிசையிலே முதலாவது வாரிசாகத் தற்போது இருந்துவருகிறார். இவருடைய சகோதரரான 28வயதுடைய பவுடுயின்அரசர் விவாகஞ்செய்யாது இன்னமும் பிரமச்சாரியாகவே இருந்துவருகின்றார். பவுலா இளவரசி லூர்துதிருப்பதிக்கு றெயின் வண்டிகள்மூலம் கொண்டுசெல்லப்பெற்ற இத்தாலியநோயாளரின் யாத்திரைகளிலே ஓர்நேர்ஸாக இருமுறை சேவைசெய்திருக்கின்றாள். இவள் சென்றகார்காலத்திலே ரோமாபுரியில் பாப்பரசரின் திருமுடிசூட்டுவிழாவைபவத்தின்போது அல்பேட்இளவரசரைச் சந்தித்தாள்.

## அரசதரிசிகர்களுக்கு அன்பளிப்பு

அன்று பிரித்தானிய மகாராணியாரின் தாயாரும், மார்கறெற்இளவரசியும் பாப்பாசரின்பேட்டிக்காக வத்திக்கானுள் பிரவேசித்தபோது, ரோமைக் குருமடங்களில்படிக்கும் நூற்றுக்கணக்கான ஆங்கிலகுருத்துவமாணவர்களும், பேராசிரியர்களும் அவர்களை வரவேற்று, ஆர்ப்பரித்துவாழ்த்துவதற்காக அங்குசமுகமாயிருந்தார்களெனப் பிந்தியசெய்தி தெரிவித்துள்ளது. தம்முடையதரிசகர்கள் அண்மியதும் பாப்பாசர் புன்னகையுடன் அவர்களை வரவேற்றார். அதன்மேல் கதவுசாத்தப்பட்டது. பிரான்ஸியபாஷையிலே நடத்தப்பட்டு 23நிமிஷங்கள் நீடித்திருந்த பேட்டி ஆரம்பமாயிற்று. மகாராணியாருக்கும், இராசகுடும்பத்தைச் சேர்ந்த ஏனையவர்களுக்கும் ஓர்விசேஷ சுபசெய்தியுடன் “பிரித்தானியதேசத்துக்கும், சாம்பிராச்சியமக்கள் சகலருக்கும் எம்பெருமான் நிறைவாகத் திவ்வியஒத்தாசையை அருளுவாராக” என்ற ஆசியைப் பாப்பாசர் மகாராணியாரின் தாயாருக்கும், மார்கறெற் இளவரசிக்கும் தெரிவிக்கலாயினர். அதன்மேல்பரிசுத்தபிதா மகாராணியாரின் தாயாருக்குத் தம்முடையஆட்சியின் தங்கப்பதக்கம்ஒன்றையும், இறப்பாயேலென்ற பிரபலசைத்திரிகரால்தீட்டப்பெற்ற வர்ணவேலைப்பாடமைந்த தேவதாயாரது சித்திரப்படம் ஒன்றின் பிரதியையும், மார்கறெற் இளவரசிக்கு அதேமாதிரியான தங்கப்பதக்கத்தைக்கொண்ட தங்க—வெள்ளி அரும்புவேலைப்பாடுள்ள பேழை ஒன்றையும் அன்பளிப்புச்செய்தார்.

# மட்டக்களப்பு தாண்டவன்வெளித் தபால்

**குருத்துவ ஞாபகதினம் :**

அன்று சித்திரை 20-ம்நாள் திங்கள்வாரம். மங்கலகரமாக மணிகள் ஆரவாரித்தன. ஆலயத்தில் பக்திச் சபையினர், பாடசாலையினர், பங்குக் கிறீஸ்தவர்கள், அன்பர்கள் பெருந்திரளாகக் கூடியிருந்தனர். “எங்கள் சுவாமி வண. ஜி. ஏ. எல். வம்பேக் அவர்கள் தமது குருப்பட்டாபிஷேகத்தின் 18-வது வருடநிறைவைப் பலிபீடத்தில் தோத்திரப் பாடற் பூசையுடன் கொண்டாட ஆரம்பித்தார். பெருந்தொகையானோர் திருவிருந்தருந்தித் தங்கள் அன்புக்குரிய கட்டளைக்குருவரின் ஆன்ம, சரீர நலன்களுக்காக வேண்டிக்கொண்டனர். வெளியூர்களிலிருந்த அன்பர்கள் தங்கள் குருவருக்காக வேண்டிக்கொண்டதுடன் வாழ்த்துச்செய்திகளும் அனுப்பிவைத்தனர். அன்று பிற்பகல் 4 மணியளவில் நமதுபங்கில் புதிதாக ஸ்தாபிக்கப்பெற்ற திருஇருதய பத்திச்சபையினரால் சிறந்ததோர் தோட்டவிருந்து நடாத்தப்பட்டது. அப்போது எங்கள் சுவாமிகளின் சேவைநலம்பாராட்டிப் பல பலசொற்பொழிவுகள் ஆற்றப்பெற்றன. ஈற்றில் குரவர் அவர்கள் யாவர்க்கும் நன்மதிகளும், நல்லாசியும் அளித்தனர்.

**எமது பாடசாலைகள் :**

ஈஸ்றர்விடுமுறை கழித்து 20-4-59 திங்களன்று எமது கிளென்னி ஆண், பெண்பாடசாலைகள் ஆரம்பமாயின. காலை 8 மணியளவில் இரு பாடசாலையினரும் பங்குத்தேவாலயத்தில் கூடினர். தூய ஆவியானவரின் உதவியை இரந்தனர். கட்டளைக்குருவரால் திவ்வியநற்கருணை ஆசிர்வாதம் அருளப்பெற்றது. அதன்மேல் அவர் ஆண், பெண் பாடசாலையினரைத் தனித்தனியே சந்தித்துக் கலந்துரையாடி நன்மதிகள் கூறினர்.

**மேதினம் :**

வைகாசித்திங்கள் புலர்ந்தது. தொழிலாளரின் பாதுகாவலராகிய அர்ச். சூசையப்பரைக்குறித்து 6-30 மணியளவில் கட்டளைக்குருவரால் பாடற்பூசை நிறைவேறியது. அன்று பிற்பகல் 3 மணியளவில் இப்பகுதியைச்சேர்ந்த ஆண்கள், பெண்கள், பிள்ளைகள்யாவரும் ஆலயவளவில் ஒன்றுகூடினர். திருச்சிலுவை அடையாளத்தைக்கொண்ட சிவப்புக்கொடிகளுடன் ஊர்வலம் ஆரம்பமாயது. ஊர்வலம் நகராவலர்நிலையச் சந்தியைஅடைந்ததும், புளியடிக்குடா, புளியந்தீவுப்பகுதிகளைச்சேர்ந்த ஊர்வலங்களுடன்சேர்ந்தது. ஆங்கு சமுகந்தந்த திருமலை ஆயர் மகாவந். இக்னேஷஸ் கிளென்னி எஸ். ஜே. ஆண்டவர் அவர்களுக்கு மலர்மாலை சூட்டிப் பாட்டாளிபுரத்தைநோக்கி அழைத்துச்சென்றனர். ஆங்கு மாபெருங்கூட்டம்ஒன்றுகூடியது. நமது ஆண்டவர்அவர்கள் தொழிலாளர்களின் பல்வேறுவகை ஆயுதங்களையும், வாகனங்களையும், கரங்களையும் ஆசிர்வதிக்கும் திருச்சடங்குகளை நிறைவேற்றிவைத்தனர். அதன்மேல் தொழிலாளர் தங்களைத் தொழிலாளியான அர்ச். சூசையப்பருக்கு ஒப்புக்கொடுக்கும்வைபவம் நடைபெற்றது. பின்னர் பிரமுகர்கள்பதின்மர் “தொழிலாளரும் சமூகமும்”, “தொழில்”, “மேதினம்”, “எமது எதிர்காலம்”, “வேலைநிறுத்தம்”, “கத்தோலிக்கமும், தொழிலாளரும்”, “யேசுவும் நாமும்” என்னும் தலைப்புகளின்கீழ் சொற்பொழிவுகளாற்றினர். ஈற்றில் மேற்றிராணியாண்டவர் அவர்களால் திவ்வியநற்கருணை ஆசிர்வாதம் அருளப்பெற்றதுடன் மேதினவைபவம் முடிவுக்குவரலாயிற்று.

— திருபர்.

## 12-ம் பத்திநாதரின் கல்லறையிலே

அருளப்பபாப்பரசர் ஒவ்வோர் மாதமும் 9-ந்திகதியன்று அர்ச். பேதுருவானவர் மகாதேவாலயத்தின் நிலவறைக்கு இறங்கிச் சென்று 12-ம்பத்திநாத பாப்பானவரின் கல்லறையைச் சந்தித்து அவருக்காகச் செபஞ் செய்துவருகின்றார். அன்று வியாழக்கிழமை அவர் தமது மாதாந்த சந்திப்பைச்செய்து, சிலநிமிஷநேரம் செபஞ்செய்த பின் 11-ம்பத்திநாத பாப்பானவருடையவும், 15-ம் ஆசீர்வாதப்ப பாப்பானவருடையவும் கல்லறைகளிலே முழந்தாட்படியிட்டுச் செபஞ்செய்யலாயினர்.

---

## சாதாரண கத்தோலிக்கரான மிஷனரிமார்கள்

நியூகினியா தீவிலே தொண்டாற்றிவருகின்ற திவ்வியவார்த்தையானவர் சபைக் குருமாருக்குச் சாதாரண கத்தோலிக்கரான 41மிஷனரிமார்கள் துணைச் செய்துவருகின்றார்கள். இவர்களிலே தொழில்நுட்ப நிபுணர்கள், எஞ்ஜினியர்கள், கட்டுவேலைசெய்கிறவர்கள், தோட்டமனேஜர்கள் ஆசிரியர்கள், கிளாக்குமார் ஆதியோர்பலரும் அடங்கியிருக்கின்றார்கள். 29 ஆடவர்களும், 12 பெண்மணிகளுமான இவர்கள் மத்தியிலே ஜேர்மனியர், அமெரிக்கர், ஆஸ்திரேலியர், டச்சுக்காரர்முதலாம் பல்வேறுசாதியத்தினரும் இருக்கின்றார்கள். இவர்கள் மிஷன்நிலையங்களிலே தனிமையாகவும், இருவர்இருவராகவும் சஞ்சரித்து, நீண்டகரைவரியுடையதும், மலைப்பாங்குமான அந்த விக்காரியமுழுவதும் பரந்திருக்கிறார்கள். இருவாரங்களுக்கொருமுறை ஞானசம்பந்தமான கூட்டங்களுக்குச் சமுகமளிக்கிறார்கள். வருடம்ஒருமுறை ஓர் ஞானவொடுக்கத்துக்கு ஒன்றுகூடுகிறார்கள். இவர்கள் சம்பளம் பெறாமலே தொண்டாற்றுகிறார்கள்.

---

## இந்தியாவின் முதலாவது ஸ்திரி நீதியரசர்

கேரளஇராச்சிய சுப்பிறீங் கோட்டின் நீதியரசராகச் சமீபத்திலே நியமனஞ்செய்யப் பெற்றுள்ள ஸ்ரீமதி அன்னா சான்டியென்ற கத்தோலிக்க அம்மையார் இந்திய உயர்நீதிமன்றத்தின் முதலாவதான ஸ்திரி நீதியரசராவர். 53 வயதுடையவரான இவர் 1929-ம் ஆண்டு ஓர் நியாயவாதியாக அரங்கேறினார். பின்னர் 1948-ம் ஆண்டு ஓர் டிஸ்திறிக் நீதிபதியாக நியமனஞ்செய்யப்பெற்றார். அப்போதும் இந்தியாவிலே இப்பதவி வகித்த முதலாவது பெண்மணி இவரே. ஐக்கோபித்திய பிரிவினைச் சபைக் கிறீஸ்தவராக இவர் பிறந்தார். ஆனால், 1930-ம் ஆண்டு அப்பிரிவினைச்சபைக் குருசிரேஷ்டராயிருந்த மார் இவானியொஸ் அதிமேற்றிராணியார் மனந்திரும்பிப் பரிசுத்த ஸ்தானத்துடன் ஐக்கியப்பட்டுக்கொண்டபோது இவரும் ஓர் கத்தோலிக்கராயினர்.

# வெனிஸ் நகரிலே அர்ச். பத்தாம் பத்திநாதர்

அர்ச். 10-ம்பத்திநாதரின் புனித உடல் பூச்சியமாக வைத்துப் பூசிக்கப்பெற்று வருகின்ற வெனிஸ்நகர் அர்ச். மாற்குவின் மகாதேவாலயத்திலுள்ள வெள்ளிப்பலிபீடத்தின் முன்பாகத் தற்போது தினமும்பதினாறுமணி நேரம் தொடர்பாகத் திவ்விய பூசைப்பலிகள் நிறைவேறி வருகின்றன. அவரது புனிதஉடலை ஏற்றிக்கொண்டு விசேஷறெயின் வண்டி வத்திக்கானிலிருந்து புறப்படுமுன் அருளப்ப பாப்பரசர் அவ்வண்டியிலேறி அப்புனித உடலைக்கொண்ட பேழையின் பக்கமாக முழந்தாட்படியிட்டுச் செபஞ்செய்து நின்றார். அதன் மேல் இருபது கருதினால்மார் அணிவகுத்துப் பேழைமுன்பாக அஞ்சலிசெய்தபடியே சென்றார்கள். றெயின்வண்டி வத்திக்கான் ஸ்ரேஷனை விட்டுப் புறப்படும் போது, பாப்பரசர் அப்புனித உடல் நம்பிஒப்படைக்கப் பட்டவர்களை நோக்கி: "மரணமடைந்த — ஆனால், ஓர்அர்ச்சிய சிட்ட பாப்பானவர்ஒருவர் உங்களிடம் நம்பிஒப்படைக்கப் பட்டிருக்கின்றார்; சாவதானமாக அவரைக் கொண்டுசெல்லுங்கள்; நாமுமே ஓர்நாள் வெனிஸ்நகருக்குத் திரும்புவோம்; ஆனால், நாம் சீவந்தராயிருக்கும்போது" எனக்கூறினார்.

பாப்பரசர் வெனிஸ்நகரின் பத்திறியாக்குவான கருதினால் ஊர்பானி ஆண்டவருக்கு எழுதிய திருமுகம்ஒன்றிலே, "நமது காலம் வரும்போதுஅர்ச்.மாற்குவின்கல்லறைக்குச்சமீபமாக வெனிஸ்நகரின் ஏனைய பத்திறியாக்குமார் குழுவுடன் அடக்கஞ்செய்யப்படவேண்டுமென நமக்குண்டாயிருந்த விருப்பம் ........ அருளப்படுமென்று சிலமாதங்களுக்கு முன் நிச்சயமாயிருந்தோம்; ஆனால், நமதுமட்டிலே ஆண்டவரின்திட்டங்கள் மற்றெல்லாக்காரியங்களிலும்போல இதிலும் மாறுபட்டிருக்கக் காண்கிறோம்; வத்திக்கான் மகாதேவாலயத்தில் அர்ச். பத்தாம்பத்திநாதரின் பலிபீடத்துக்குச் சமீபமாய் அடக்கஞ் செய்யப்பட்டுக் கிடப்பது நமக்கு மிகப்பெரும் கௌவரமாய் மாத்திரமல்ல, ஆனால், நமக்குப்பெரும் மகிமைபெருமைக்கு ஏதுவாயும் இருக்கும்; அத்துடன் அதிகம் தாழ்ந்த ஓர் இடத்திலிருந்து கொண்டு அவருடைய குரலோசையுடன் நமது குரலோசையையும் ஒன்றுசேர்த்து முழுக்கிறீஸ்துவ மந்தையின்மீதும் தேவனின் ஆசீர்வாதத்தையும், வரப்பிரசாதத்தையும் ஒருங்கே இரந்து கொள்ளக்கூடிய தாயும் இருக்கும்" என எழுதியிருக்கின்றார்.

அர்ச். 10-ம்பத்திநாதரின் புனிதஉடல் அங்கு இருந்துவரும் ஒருமாதகாலத்திலும் வெனிஸ் மாகாண நகர்களும், கிராமங்களும் அர்ச். மாற்குவின் மகாதேவாலயத்துக்கு யாத்திரைகள் நடத்தவிருக்கின்றன. அவைகளில் அர்ச். 10-ம்பத்திநாதர் பிறந்த திறெவிஸோ மேற்றிராசனத்தையும், அவர் ஏழுவருடகாலம் மேற்றிராணியாராயிருந்த மந்துவா மேற்றிராசனத்தையும் சேர்ந்த நகர்கள், கிராமங்களும் அடங்கும்.

—※—

# புத்த சர்வகலாசாலையில் கத்தோலிக்க சமயபோதனை

தாய்லாந்தென அறியப்படுகிற சியதேச பாங்கொக்நகரிலுள்ள புத்தசர்வகலாசாலை ஒன்றின் அதிபரது விசேஷவேண்டுகோளின்பேரிலே சலேசியன் சபைக் குருவானவர் ஒருவர்சென்று புத்தகுருமாருக்குக் கத்தோலிக்க சமயத்தைப்பற்றிக் கிரமமாகப் பாடங்கள் படிப்பித்துவருகின்றார். சிலமாணவர்கள் தங்கள் அறைகளைத் திவ்வியகர்த்தருடையவும், தேவதாயாருடையவும் படங்கள்கொண்டு அலங்கரித்துத் தானும் இருக்கின்றனர்.

வண. ஜோண் உல்லியானு சுவாமியார் பாங்கொக்நகரிலுள்ள தொன்பொஸ்கோவின் அநாதசாலைச் சில்றாலயத்தில் ஓர் நாள் தமது கடமைச்செபத்தை வாசித்துக்கொண்டிருக்கும்போதே சம்பவம்ஆரம்பமானது. அப்போதுஅவர் சல்லாபசாலைக்கு அழைக்கப்பெற்றுச் சென்றபோது அங்கே ஆடம்பரமாக உடைதரித்திருந்த ஓர்மனிதர் வற் மகா தற் (பெரிய அஸ்திடகோபா) றின் புத்தகோவிலிலுள்ள சர்வகலாசாலைஅதிபரான பிரா பிமொன்லாதம் மடாதிபரிடமிருந்து கொண்டுவந்த கடிதம் ஒன்றை அவரிடம் கொடுத்தார். அச்சர்வகலாசாலையிலே கத்தோலிக்கசமயத்தைப் படிப்பிக்குமாறு அந்தக்கடிதம் அவரைக் கேட்டிருந்தது.

"எனதுகுருமார் கிறீஸ்துவேதத்தைப்பற்றி நன்றாயறிய விரும்புகிறார்கள். ஓர்கத்தோலிக்க குருவானவரைக் காட்டிலும் வேறெவரும் தங்களைப்படிப்பிக்க முடியாதெனஅவர்கள் எண்ணுகிறார்கள்" என்று அக்கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது. புத்தமடாதிபர் வண. உல்லியானு சுவாமியாரை முதன்முறையாகச் சந்தித்தபோது, கிறீஸ்துநாதரை மனிதவர்க்கத்தின் பெரியபோதகர்களில் ஒருவராகத் தாங்கள் மதிப்பதாக அவர்சுவாமியாரிடம் கூறலாயினர். கடந்தகாலங்களிலே புத்தசமயத்துக்கும், கத்தோலிக்க சமயத்துக்குமிடையே தப்பெண்ணம் இருந்துவரலாயிற்று; அதற்குக்காரணம், தமது அபிப்பிராயப்படி அறியாமையே என்றும் அவர்கூறினார். புத்தசமயத்தின் எதிர்காலதலைவர்களாய் இருக்கப்போகும் ஆயிரம்பேர்களிலிருந்து தெரியப்பட்ட பத்து புத்தகுருமாருக்குக் கத்தோலிக்க சமயத்தைப்படிப்பிக்குமாறுசுவாமியாரைக் கேட்டுக்கொண்டார்.

வண. உல்லியானு சுவாமியாரை இந்தப் புத்தமடாதிபர் அழைப்பதற்குத் தூண்டியகாரியங்களில் ஒன்று, கம்யூனிஸத்தின் அச்சுறுத்தலேயாகும். "கம்யூனிஸத்தை எதிர்த்துப்போராடக் கத்தோலிக்கசமயம் என்ன செய்கின்றதென்பதை நாம்அறிவோம்; எமதுசமயத்தைப் பாதுகாப்பதிலே கத்தோலிக்கரின் நிலையைக்கையாள நாம் ஆசிக்கின்றோம்; இந்தப்போராட்டத்திலே கத்தோலிக்கசமயம்எமக்கு உதவிசெய்யுமென நாம்நிச்சயமாயிருக்கிறோம்; சமயமாற்றஞ் செய்ததாகத் தம்மில்நாம் குற்றஞ்சுமத்தமாட்டோம். அதற்கு மாறாகஎமதுபுத்தகுருமாருள்சிலர் தாம்படிப்பித்த பாடங்கள் காரணமாகக் கத்தோலிக்கராக விரும்பினால், நன்மைத்தனத்தின் அதிகஞ்சிறந்த பாதையாகத் தங்களுக்குக் காணப்படுவதைப் பின்பற்றும் ஒவ்வொருவரையிட்டும் நாம் மகிழ்ச்சியடைவோம்" என்றும் அவர் கூறலாயினர். கடந்த நான்கு வருடங்களாக யாதாமோர் அசம்பாவிதமின்றியே சுவாமியாரால் கத்தோலிக்கசமய பாடங்கள் போதிக்கப்பட்டு வந்திருக்கின்றன.

---

## யுத்தத்தின்பின் முதல்முறையாக

ஓர்கம்யூனிஸ்தநாடான யூகோசிலேவியாவின் தலைப்பட்டணமாகிய பெல்கிறேட்நகரின் யூஜ்சிக் அதிமேற்றிராணியார் பாப்பரசரைத் தரிசிப்பதற்காகச் சமீபத்தில் றோமாபுரிபோய்ச் சேரலாயினர். யூகோசிலேவிய அரசாங்கம் றோமாபுரிக்கு இத்தகைய தரிசனையைச்செய்யக் கத்தோலிக்க அதிமேற்றிராணியார்ஒருவருக்கு அனுமதியளித்திருப்பது யுத்தத்துக்குப்பின் இதுவேமுதன்முறையாகும். அத்தோடு யூஜ்சிக் அதிமேற்றிராணியார் றோமாபுரியிலே தமதுமேற்றிராசனத்தின் சமயநிலைபற்றி அறிக்கையிடக் கூடியதாயிருப்பதும் கடந்த இருபதுவருடங்களில் இதுவே முதன்முறையாகும்.

---

## பாப்பரசர்வாழ்க்கையில் ஒருநாள்

"23-ம் அருளப்பபாப்பரசரின் வாழ்க்கையிலே ஒருநாள்" என்ற சினிமாப்படம் இத்தாலிய ரெலிவிஷன் வெள்ளித்திரைகளிலே தற்போது காண்பிக்கப்பட்டுவருகிறது. 35 நிமிஷம் காண்பிக்கப்படும் இந்தப்படம் ஓர்இத்தாலிய கம்பெனியால் தயாரிக்கப்பட்டது. சிலகாட்சிகள் முதன்முறையாகப் பாப்பரசரின் படனசாலையினுள்ளேயே படம் பிடிக்கப்பட்டன. இதிலுள்ள காட்சிகளிலே கருதினால்மாரையும், மற்றும் குருசிரேஷ்டர்களையும் பேட்டியின்போது பாப்பரசர் வரவேற்பது, அர்ச். பேதுருவானவர் மகா தேவாலயத்திலே பெரும் யாத்திரிகர் கூட்டங்களுக்கு அவர் பேட்டியளிப்பது, வத்திக்கான் தோட்டங்களினூடாக அவர் உலாவிவருவது, லூர்துபதியின் மசபியேல்குகையை ஒத்ததாய் வத்திக்கானில் அமைந்துள்ள திருக்கெபி முன்பாக அவர் செபிப்பது, கடைசியாக அவர் தமது படனசாலையில் கடமைபார்ப்பது என்பனவும் அடங்கியுள்ளன.

## வைகாசி மாதம்

பொதுக்கருத்து: இளைஞர்களைப் பயிற்றுவிக்கும் தொண்டில் ஈடுபட்டுள்ள உலகவாசிகளான ஆண்கள், பெண்களுக்காக வேண்டிக்கொள்வது.

வேதபோதக கருத்து: கன்னிமரியாள்வழியாக முஸ்லீம்கள் அவளது தெய்வீக மைந்தனைப்பற்றிய முழு அறிவையும் அடைவதற்காக மன்றாடிக் கொள்வது.


சத்திய வேத

# பாதுகாவலன்

1959-ம் ஆண்டு

வைகாசி மாதம் 7-ந் திகதி


## மேதினவிழா

மேதினவிழாவைக் கத்தோலிக்க தொழிலாளர்உலகம் தொழிலாளியான அர்ச். சூசையப்பர் விழாவாக இம்முறையும் பக்திச் சிறப்பாய்க் கொண்டாடியது. ஆனால், ஏனையதொழிலாளர் விழாங்களைப்போன்று விழலான ஆரவாரங்கள், ஆர்ப்பாட்டங்கள், நீலம் சிவப்புமுதலாம் வர்ண உடைகள், கொடிகள், நடனங்கள், பெருமுழங்க ஊர்வலங்கள், பெரும்கூட்டங்கள், "இதைச் செய்துமுடிப்போம், அதை வெட்டிவிழுத்துவோம், பூலோக சுவர்க்கத்தைக் காணச்செய்வோம்" என்றவாறுன உணர்ச்சிவசம் உண்டுபண்ணும் எதிர்வெடிப்பேச்சுகள் எவையுமில்லாது கத்தோலிக்க தொழிலாளர்உலகம் அதனைப் புனிதமாகவும், பக்திப்பரவசமாகவும் கொண்டாடியது. இலங்கையிலே அரசியற்கட்சிகள் நடத்திய தொழிலாளர்விழாக் கூட்டங்களிலும், ஆர்ப்பாட்டங்களிலும், பேச்சுகளிலும், வாய்வீச்சுகளிலும்கண்டதென்ன? அந்தந்தக்கட்சிகளின் தலைவர்களும், அவர்களுடன்கூடிய சகாக்களும் எதிர்க்கட்சிகளையும், அக்கட்சிகளின் தலைவர்களையும், அவற்றின்கொள்கைகளையும் இடுதண்டம் பிடிதண்டமாக — அண்ட கோளங்களும் அதிரும்படியாக ஆவேசத்துடன் கண்டனஞ்செய்ததும், தொழிலாளர்களை ஆவேசப்படுத்தியதும், ஈற்றிலே தத்தம் கட்சிகளின்பலத்தைக் கணித்துப் பரீட்சித்ததுமேயல்லாது வேறொன்றுமல்ல. கடவுளைப் பற்றிய சிந்தனையோ, கடமையைப்பற்றிய சிந்தனையோ எதுவுமேயின்றி லோகாயதபோக்கிலேயே யாவும்நடைபெறலாயின. ஆனால், கத்தோலிக்க தொழிலாளரோ மேதின விழாவை ஓர் பூசிதவிழாவாகக் கொண்டு, ஞாயிறு, கடன் திருநாட்களில்போன்று ஆலயதரிசனஞ்செய்து, திவ்வியபூசை கண்டு, ஆராதனைவழிபாடு செய்து, தங்கள்பாதுகாவலராம் தொழிலாளியான அர்ச். சூசையப்பரின் அடைக்கலத்தைநாடுவதிலும், அவரின்மாதிரிகையைக் கண்டுபாவிப்பதிலுமாக அறிய வேண்டியவைகளை அறிவதிலும், தெளிய வேண்டியவைகளைத் தெளிவதிலும், அம்மாதவமுனிவனையே நடுநாயகமாகக்கொண்டு தங்கள்ஊர்வலங்கள், கொண்டாட்டங்களை நடத்துவதிலும் கருத்தாயிருந்தார்கள். யாழ்ப்பாணநகரிலும் கத்தோலிக்க தொழிலாளரின் மேதினவிழாக் கொண்டாட்டம் முந்தியமுறைகளிலும் இம்முறை அதிகம்சோபிக்கலாயிற்று. அன்றுகாலை7மணிக்கு ஆசனக்கோவிலிலே நம்மேற்றிராணியாண்டவர் திவ்வியபூசை நிறைவேற்றினர். அதற்கு யாழ்ப்பாணத்தின் பல்வேறுதொழிற் சமூகங்களைச் சேர்ந்தவர்களும், தொழிலாளரின் பிரதிநிதிகளும், ஏனையோரும் பெருந்திரளாகச் சமுகமளித்திருந்தார்கள். அவ்வாறு சமுகமளித்திருந்து, திருவிருந்துப் பக்தியமர்ந்து அன்றுதினத்தைத் தகுந்தமுறையாய் ஆரம்பித்தார்கள். அதன்மேல் தொழிற்சமூகங்களைச்சேர்ந்தவர்கள் வழமைபோலச் சம்பாஷணைகள்நடத்தியும், திருமணித்தியாலத்தில் கலந்தும், செபமாலை சொல்லியும் பகல்வேளையைக் கழித்தார்கள். ஈற்றில், அவர்களின் மேதினவிழாவிற்கு முடிசூட்டியதுபோன்று பிற்பகல் 4மணிக்குச் சூசைமாமுனீந்திரன் பட்டணவீதிகளினூடாகப் பவனி வரலானார். வாச்சிலொன்றை ஓர் தோளில்வைத்து ஒருகரத்தால் தாங்கியபாவனையாகவும், மறுகரத்தால் மக்களைஅணைக்கும் பாவனையாகவும், தொழில் ஆயுதங்களைக்கொண்ட பையொன்றை முதுகில்தொங்கவைத்த பாவனையாகவும் அலங்காரதேர் ஒன்றில் சிங்காரமுற்றுவிளங்கிய வீதிகளினூடாக அவர் பவனி சென்றகாட்சி ஓர்பரமானந்த காட்சியாயிருந்தது. மின்னிக் குமுறி முழங்கி அயற்புறங்களிலெல்லாம் மழையைப்பொழிந்த கார்மேகமானது மாதவவளனார் ஊர்வலமாகச்சென்ற இடங்களை அணுகாது அகன்றுபோனமையும் பலர்க்கும் ஓர்அற்புதகாட்சியாயிருந்தது. பல்வேறுகோவில்களையும்சேர்ந்த பல்லாயிரக்கணக்கானமக்களின் நீடியபெரும் ஊர்வலமானது கடற்கரை மைதானத்தை அடையவே, அங்குமகாதேவாலயம்போன்று எழிலுற்றுவிளங்கிய மணிமாடத்தின்கண் மாதவமுனிவர் பற்றியெழுந்தார். அப்போது அந்த மைதானத்திலே சமுத்திரம் போலத் தேங்கியிருந்த மக்கள் குழாம் அடிபணிந்து அவரை வணங்கியது. அதன்மேல் தொழிலாளர்நால்வர் மேதினவிழாவையும், அதற்குநடுநாயகமும், தொழிலாளியுமான சஞ்சூசைமாமுனிவரையும்பற்றிச் சுருக்கமாகவும், விளக்கமாகவும் ஆற்றிய சொற்பொழிவுகள் எல்லவர்இதயங்களையும் இன்பசாகரத்தில் ஆழ்த்தியது. ஈற்றில், தொழிலாளர்களையெல்லாம் அவர்களின் பாதுகாவலருக்கு ஒப்புக்கொடுக்கும்செபம் உருக்கமாகவாசிக்கப் பட்டு, மேற்றிராணியாண்டவர் அவர்களால் அருளப்பெற்ற திவ்வியசற்பிரசாதஆசீர்வாதத்துடன் மங்கலகரமாக விழாநிறைவாயிற்று.

> "ஒற்றுமையீனம் வலிமையை அழிக்கும்; தீயஒழுக்கம் உடம்பை அழிக்கும்."

## அங்கும் இங்கும்

### இன்னமும் உத்தியோகத்தில்தான்

"சாதாரண வேலைகளில் பயிற்சி பெறுவதற்குக்கூடப் போதியளவு தமிழ் வாலிபர்கள் முன்வரவில்லை. கையில் அழுக்குப்பிடிக்காது கதிரையில்அமர்ந்து செய்யக்கூடிய உத்தியோகத்திலதான் அவர்களது மனம் இன்னும் அலைந்துகொண்டிருக்கிறது."

டக்டர் பி. செல்வநாயகம்,
சர்வகலாசாலைப் பேராசிரியர்

### படித்தஇளைஞர்கள் முன்வரவேண்டும்

"தமிழ்வட்டாரத்திலே பத்திலொன்று பகுதிவரை ஆனையிறவுக்கு அப்பால்இருக்கிறது. ஆனால், தமிழ்மக்களில் மிகக்குறைவானவர்களே ஆனையிறவுக்கப்பால சென்றுள்ளனர். தமிழர்பொருளாதாரத்துறையில் முன்னணிக்குவர அங்குசெல்வது அவசியமாகும். படித்தஇளைஞர்கள் தமிழர்களுக்கு எல்லாத்துறைகளிலும் வழிகாட்டமுன்வரவேண்டும். தமிழர் வவுனியா, கிழ்மாகாணம் போன்ற பகுதிகளில் குடியேறி அங்கு விவசாயத்தொழிலில் மும்முரமாகஈடுபட்டால் தான் நாம்முன்னேறமுடியும். யாழ்ப்பாணப்பிரிவிலேயே நாம்அடைந்துகொண்டிடப்பது விரும்பத்தக்கதல்ல."

திரு. வி. என் நவரத்தினம்,
சாவகச்சேரி எம். பி.

### இளைஞர்களுக்குப் பாராட்டுரை

"சிங்களபாஷையில் எவ்வளவு தேர்ச்சி பெற்றாலும தமிழருக்கு அரசாங்கஉத்தியோகம் கிடைத்துவிடாது. விவசாயமும், கமத்தொழிலுந்தான் நமக்குக் கதிமோட்சம அளிக்கக்கூடியவைகள். இவைகள் புறக்கணிக்கப்படின் நம்மால்கடைத்தேறமுடியாது. கணேஷபுரத்தில் குடியேறியுள்ள இளைஞர்களை நான்பெரிதும் பாராட்டுகிறேன். கைக்கடிகாரம், பட்டுச்சட்டை, காற்சட்டை ஆகியவைகளை அணிந்துகொண்டிருந்தாலும் அவர்கள் விவசாயத்துறையில் இடையறாது பாடுபட்டுவருகிறார்கள். கோழிப்பண்ணையும்வைத்து அவர்கள் பலனடைந்து வருகிறார்கள்.

திரு. வி. என். நவரத்தினம்,
சாவகச்சேரி எம். பி.

### சுயமரியாதை இருக்குமானல்

"பிரதமர் கூட்டுறவுவங்கி மசோதாவுக்குச் செய்ததைவிடப் பிலிப் குணவர்த்தனவுக்குத்தான் மிகமோசமான வேலையைச் செய்துவிட்டார். அம்மசோதாவை அவர் பிலிப்பிடமிருந்து பறித்து "உம்மிடம் எனக்குநம்பிக்கையில்லை; நானே அதைப் பார்த்துக் கொள்ளுகிறேன்" என்னும்பொருள் படத் தெரிவித்துவிட்டார். பிலிப் குணவர்த்தனவுக்குச் சுயமரியாதை இருக்குமாகில் அவர் தனதுபதவியை இராசினாமாச் செய்யவேண்டும். ஆனால், அவரோ எப்பொழுதும்போல் அடிபணிந்தும் பதவியைக்கைவிடார். பிசின்போல அவர் பதவியில் ஒட்டிக் கொண்டிருப்பதுகண்டு எவரும் ஆச்சரியப்படுவதற்கில்லை."

டக்டர் என். எம், பெரேரு,
எதிர்க்கட்சித்தலைவர்.

### தமிழரைஒழித்துக்கட்டும்திட்டம்

"டக்டர் என். எம். பெரேரா அவர்கள் பொறளைவட்டாரத்தில் தோல்வியடைந்தும் தனது அரசியல்கொள்கைகளில் சிறிதளவேனும் மாற்றம் ஏற்படுத்தாததற்காக நான் அவரை மெச்சுகிறேன். சிங்களப்பிரதேசங்களில் மிகவும் துணிவுடன் தமிழுக்குச் சமஅந்தஸ்துக் கொடுக்கவேண்டுமென்று பிரசாரஞ்செய்து வருவதற்காகவும் நான் அவரைக்கௌரவிக்கிறேன். ஆனால், அவருடைய குடியேற்றதிட்டக் கொள்கை தமிழினத்தை ஒழித்துக் கட்டும் ஒருதிட்டமாய் இருப்பதாகவே நான்கருதுகிறேன்."

திரு. சி. வன்னியசிங்கம்,
கோப்பாய், எம். பி.


**TUITION**
IN
SHORTHAND-TYPEWRITING

Students (either sex) prepared for Pitmans Londou, London Chamb. of Comm. and other Examinations.

Students already trained are in Govt. Service, Firms, Schools and other Institutions.

*SHORTHAND SPEED TRAINING*
*A SPECIALITY*

JOSEPH ANDREW
"Mazenod House"
4th Cross St., Jaffna.



**விற்பனைக்கு**

முத்திப்பேறுபெற்ற
மாட்டின் தே போரஸ்
சரித்திரச் சுருக்கமும்
நவநாள் மன்றுட்டும் அடங்கியது.
முத்தர் மாட்டினில்
பத்திகொள்ளும் உத்தமர்க்கு
ஓர் அரிய சந்தர்ப்பம்

— விலை பிரதி சதம் 10 —

வியாபாரிகளுக்கு விசேஷ கழிவு.

தேவையானோர்:

அதிபர்,
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்

என்ற முகவரிக்கு எழுதவும்.


● வடஅத்திலாந்திக் ஒப்பந்தஸ்தாபன நாடுகளைச்சேர்ந்த போர்வீரர்களின் திருயாத்திரைஒன்றுவருகிறஆனி மாதம் 6-ந்திகதியன்று லூர்துபதிக்கு நடக்கேறவிருக்கின்றது. இந்தயாத்திரையிலே உலாந்தபட்டாளங்களைச் சேர்ந்த சுமார் 1,000 போர்வீரர் கலந்துகொள்ளவிருக்கின்றனர். உலாந்த பாதுகாப்புமந்திரி அவர்களெல்லாம் யாத்திரையிற்கலந்துகொள்ள அனுமதி கொடுத்திருக்கின்றார்.

● வடஅத்திலாந்திக் ஒப்பந்தம் நிலைத்திருந்துள்ள பத்துஆண்டுகளிலும் "யுத்தத்துக்குமாறுன ஓர்இனகுறன்ஸ்பொலிஸி"யாய்அதுஇருந்துள்ளதென்பதை உறுதிப்படுத்தியிருக்கிறதென்றும், ஆனல், அருளப்பபாப்பரசரின் நல்லெண்ணவேண்டுகோளுக்கு உலகின் இராசதந்திரிகள் செவிசாயாதிருப்பதால் பாதுகாப்புஒப்பந்தங்கள் கெடுபிடியுத்தத்தையும், போராயுதங்களின் பாரத்தையும் விலக்கிவிடக்கூடாதென்றும "ஒசேர்வாத்தோறே ரோமானோ"என்ற வத்திக்கான் தினசரி எச்சரித்திருக்கின்றது.

● தீபேத்திலிருந்து ஏழாயிரம் பேருக்குமேற்பட்ட அகதிகள் இந்திய எல்லைக்குள் வந்திருப்பதாகச் சென்ற 1-ந்திகதிவெளிவந்தஅதிகாரபூர்வமான இந்திய அரசாங்கஅறிக்கை தெரிவித்துள்ளது. சிலர் குடும்பங்களுடன் வந்திருக்கிறார்கள். தீபேத்திலிருந்து அகதிகள் வெளியேறுவதைத் தடுக்கும் நடவடிக்கையாகச் சீனஅதிகாரிகள் எல்லைப்புறங்களைப் படைகளின்கீர்வாகத்தில்வைக்க முயன்றுவருகிறார்களாம்.

● ருஷ்யபிரதமர் கிரு குருசேவுக்குக் கடுமையான இரத்தோட்டக் கோளாறு ஏற்பட்டிருப்பதுடன் அடிக்கடி மயக்கமும் ஏற்படுவதாக மேற்கு ஜேர்மன் பத்திரிகையொன்றில் செய்தி வெளியாயிருக்கிறது. இந்தச்செய்திக்கு ஆதாரம்என்னவென்று அப்பத்திரிகை கூறவில்லை. ஆனல், மஸ்கோவிலிருந்து கிடைத்தபடி அப்பத்திரிகையின் முதற்பக்கத்தில் அதுவெளியிடப் பட்டிருக்கிறது.

# சுதேச வர்த்தமானம்

### ஒன்றுக்கு மூன்றுவட்டாரம்

சமீபத்தில் நடைபெறவிருக்கும் வவுனியாப் பட்டினசபைத் தேர்தலிலே மூன்று வட்டாரங்களில் போட்டியிட வவுனியா எம். பி. திரு. சி சுந்தரலிங்கம் அவர்கள் பிணைப்பணம் கட்டியிருக்கின்றார். முதலாம், இரண்டாம், ஐந்தாம் வட்டாரங்களே அம்மூன்றுமாகும். வவுனியாப் பட்டினசபைத்தலைவர் திரு. எஸ். சுப்பிரமணியம், திரு. டி. சுப்பிரமணியம், ஜனுப் எஸ் யூசுப் என்பவர்களே தற்போது அம்மூன்று வட்டாரங்களினதும் அங்கத்தவர்களாய் இருக்கின்றார்கள். இம்மூவரும் சமஷ்டிக்கட்சியின் ஆதரவாளர்கள்.

### கூட்டுறவுவங்கி மசோதா

உணவுமந்திரி பிலிப் குணவர்த்தனை சிருட்டித்த கூட்டுறவுவங்கி மசோதாவில் திருத்தஞ்செய்யும் எவ்வித யோசனையையும் எதிர்ப்பதென்று எம். ஈ. பி. கட்சியின் இடதுசாரிக் கோஷ்டி சென்ற ஞாயிற்றுக்கிழமை தீர்மானித்துள்ளது. இந்த நாடு எந்தப் பாதையிலே சென்றுகொண்டிருக்கிறது என்பதைப் பார்க்குஞ்சமயம் வந்துவிட்டதென்று இடதுசாரிக்கட்சியின் தலைவரும், உணவுமந்திரியுமான திரு. பிலிப் குணவர்த்தன தனது கோஷ்டியினரிடம் கூறியிருக்கின்றார். இந்தமசோதாவின் திருத்தங்கள்பற்றி விவாதிக்கப்படவிருக்குந்தினமாகிய இம்மாதம் 20-ந் திகதிதான் இடதுசாரிக்கோஷ்டி அரசாங்கத்தை விட்டுவிலகிப் புதிய பொதுத்தேர்தல் நடத்த அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கும் நெருக்கடி ஏற்படுமென்று திரு. பிலிப் குணவர்த்தன தனது கோஷ்டியிடம் கூறியதாகத் தெரியவருகிறது. அதற்கிடையிலே மசோதாவில் சில திருத்தங்கள்செய்ய உணவுமந்திரி சம்மதிக்குமாறு பிரதமர் அவருடன் பலமுறை பேச்சுவார்த்தை நடத்தியதாகவும், ஆனால், திருத்தங்களென்ற பேச்சுப்பற்றி விவாதிக்கவே உணவுமந்திரி மறுத்துவிட்டதாகவும் சொல்லப்படுகிறது.

### சிறையில் 'சிங்களம்மட்டும்'

அரசாங்கத்தின் தனிச்சிங்கள கொள்கையைத்தழுவி இம்மாதம் 1-ந் திகதிமுதல் அனுராதபுரச் சிறைச்சாலையில் சிங்களம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ள காரணமாகத் தமிழரான சிறைக்காட்டுமாரும், தமிழரான ஏனைய அதிகாரிகளும் பெரிதும் சங்கடத்துக்குள்ளாயிருப்பதாகத் தெரியவருகிறது. இதுவரை அச் சிறைச்சாலையிலே சகல நடவடிக்கைகளும் ஆங்கிலத்திலேயே நடைபெற்று வந்தன. ஆங்கிலத்தில் தேர்ச்சிபெற்ற தமிழ்அதிகாரிகள்பலர் சமீபத்தில் பதவி உயர்வும் பெற்றுள்ளனர். ஆனல், புதியநிலை பலவசதியீனங்களை உண்டுபண்ணுவதால் அவர்கள் உள்நாட்டுமந்திரிக்கு ஆட்சேபனைதெரிவிக்க முடிவுசெய்திருக்கிறார்கள்.

### தனிச்சிங்களமும் தமிழ்க்கிளாக்குமாரும்

சுகாதார பகுதியிலிருந்து சமீபத்திலே பிறப்பிக்கப்பட்ட உத்தரவுப்படி, தனிச்சிங்கள சட்டம் நிறைவேற்றப்பட்டபின் தமிழ்ப்பகுதிகளிலே நியமிக்கப்பட்ட தமிழ்க்கிளாக்குமார் தங்கள் பதவிகளிலே நிரந்தரமாக்கப்படுவதற்குச் சிங்களத்தில் தேர்ச்சியடைந்திருக்கவேண்டும். 1956-ம் ஆண்டு தனிச்சிங்களசட்டம் அரங்கேறியபின் ஆஸ்பத்திரிக் கிளாக்குமாராக நியமிக்கப்பட்டவர்கள் தங்கள்பதவி நிரந்தரமாக்கப்படுவதற்குமுன் சிங்களத்திலே கனிஷ்டதாரதரப் பத்திரத்துக்குச் சமமான பரீட்சையொன்றில் சித்தியடையவேண்டும், இன்றேல் அவர்கள் பதவி நிரந்தரமாக்கப்பட மாட்டாதென்று கொழும்பிலுள்ள சுகாதார தலைவராலே யாழ்ப்பாணத்திலுள்ள சுகாதாரபகுதி அதிகாரிகள்மூலம் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

### தமிழ்ச் சர்வகலாசாலை

தமிழ்ச்சர்வகலாசாலை இயக்கத்தின் திரிகோணமலைப் பிரதேச கம்மிற்றிக் கூட்டம்ஒன்று நடைபெற்று அதிலே திரிகோணமலையில் கட்டப்படவிருக்கும் சர்வகலாசாலைக் கட்டடத்துக்கு அத்திவாரக்கல் நாட்டும் வைபவத்திற்கான ஒழுங்குகள் செய்வது சம்பந்தமாய் ஆலோசிக்கப்பட்டது. பேராசிரியர் ஏ. சின்னத்தம்பி அவர்கள் கூட்டத்தில் பேசியபோது: "தமிழ்ச் சர்வகலாசாலை இயக்கத்திற்கான திட்டங்கள் வகுக்குங்காலம் போய்த் திட்டங்களை நடைமுறைக்குக் கொண்டுவருங்காலம் வந்துவிட்டது; தமிழ்ப் பேசும் மக்களுக்கென ஓர் சர்வகலாசாலை மிகவும்அவசியமாகும்; மக்கள் இதை உணர்ந்து அதற்குத்தாராளமாக உதவிபுரியவேண்டும்; திரிகோணமலையில் இந்த இயக்கத்திற்கென வாங்கப்பட்டுள்ள நிலத்திலே இம்மாதம் 10-ந் திகதியன்றுகாலை 10 மணிக்கு அத்திவாரக்கல் நாட்டுவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது; இதுவே எமது இயக்கத்தின் முதலாவது கட்டடம்" எனக் கூறினின்றார். ஈற்றில் அத்திவாரக்கல் நாட்டும் வைபவத்திற்கான ஒழுங்குகளைச்செய்ய நால்வரைக்கொண்ட கம்மிற்றி ஒன்று தெரிவுசெய்யப் படலாயிற்று.

### ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரி

ஊர்காவற்றுறை அரசினர் ஆஸ்பத்திரியிலே இம்மாதத்திலிருந்து இரு டக்றர்மார் வைத்தியசிகிச்சை அளிக்கவிருப்பதாகத் தெரியவருகிறது. ஆஸ்பத்திரி வெளிநோயாளர்சங்கமும், பட்டினசபை, கிராமச்சங்கங்களும் எடுத்துக்கொண்ட நடவடிக்கையைத் தொடர்ந்து தீவுப்பகுதி எம். பி. திரு. வி. ஏ கந்தையா அவர்களின் பெருமுயற்சியால் அரசாங்கம் இரு டக்றர்மாரை அனுப்பச் சம்மதித்திருப்பதாகச் சொல்லப்படுகிறது.

### முதலில் சிங்களப்பிரதி

அரசாங்கபகுதிகள் விடுக்கும் நிர்வாகஅறிக்கைகளின் சிங்களப்பிரதிகள் வெளிவருமுன் ஆங்கிலப்பிரதியையோ அன்றேல் தமிழ்ச் சுருக்கப் பிரதியையோ வெளியிடக்கூடாதென்று உத்தியோகமொழி விசேஷ கமிஷனர் ஓர் உத்தரவு பிறப்பித்திருக்கின்றார். தமிழ்ச் சுருக்கப்பிரதியை வெளியிடுவதில் தாமதம் ஏற்படின் சிங்கள, ஆங்கிலப் பிரதிகளை ஒன்ருக வெளியிடலாமென்பதும், ஆங்கிலப்பிரதிகளைச் சிங்களத்தில் மொழிபெயர்க்கத் தகுதிவாய்ந்த உத்தியோகஸ்தர்கள் இல்லாத அரசாங்கபகுதிகள் இந்த அறிக்கைகளை உத்தியோக மொழிப்பகுதிக்கு அனுப்பிவைக்க வேண்டுமென்பதும், தமிழில் மொழிபெயர்க்க வசதியில்லாத பகுதிகள் ஆங்கில சுருக்கப்பிரதியைத் தகவல்பகுதிக்கு அனுப்பிவைக்க வேண்டுமென்பதும் அவரது உத்தரவாகும்.

### புதிய வர்த்தகக் கல்லூரி

இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியிலுள்ள வர்த்தகப்பிரிவை ஓர் வர்த்தகக் கல்லூரியாக மாற்றியமைக்கத் தீர்மானமாயிருக்கிறது. கல்விமந்திரிகளுக்கும், கல்விப்பகுதி அதிகாரிகளுக்கும், தொழில்நுட்பக்கல்லூரி அதிபருக்குமிடையே நடைபெற்ற ஓர் மகாநாட்டின்போதுதான் இவ்விதம் தீர்மானிக்கப்படலாயிற்று. இந்தக் கல்லூரியிலே வர்த்தகத்துறையில் சுமார் 750 மாணவர்கள்படிக்க வசதி செய்யப்படவிருக்கிறது. வர்த்தக பரீட்சைகளுக்கான பாடத்திட்டங்களைப் பிரித்தானியிலுள்ள வர்த்தக கல்லூரிகளின் தரத்துக்கு இணையானதாய் இருக்கும் வகையிலே தயாரிக்குமாறு பரீட்சைக் கம்மிஷனருக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

# வைகாசித்திருநாள்—பாத்திமாகிரி

## பண்டத்தரிப்பு

பண்டத்தரிப்பு, பாத்திமாகிரியில் கோவில்கொண்டெழுந்தருளியிருக்கும் மாசற்றஇருதயநாயகியின் திருஸ்தலத்திலே பாத்திமாவில் தேவஅன்னை முதல்தரிசனை அளித்ததினமாகிய இம்மாதம் 12-ம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 7 மணிதொடக்கம் கொண்டாடப்படும்.

**நிகழ்ச்சிநிரல் :**

மாலை :
- 7-00 திவ்விய சற்பிரசாதம் எழுந்தேற்றம் செய்யப்படுதல்.
- 7-15 முதலாவது செபமாலை (காரணிக்க விளக்கத்துடன்)
- 8-15 இரண்டாவது செபமாலை (காரணிக்க விளக்கத்துடன்)
- 9-15 மூன்றுவது செபமாலை (காரணிக்க விளக்கத்துடன்)
- 10-15—11-00 இடைவேளை.
- 11-00—12-00 திருமணித்தியாலமும், சற்பிரசாத ஆசீர்வாதமும்.
- 12-00 திவ்விய பூசை.

6-ந்திகதி தொடக்கம் தினமும் பிற்பகல் 6-30 மணிக்கு மாலைஆராதனையும், பிரசங்கமும் நடைபெறும்.

பாத்திமாகிரி,
6–5–59

**P. T. ஜேம்ஸ் O. M. I.**,
கட்டளைக்குரவர்.

---

## அர்ச். சூசையப்பரின் சிறியநாய்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வண்ணம் எத்தனை எத்தனையோவகையாக அந்திரே பிறதர் மனந்திருப்பித் தங்கள் துர்நெறி விட்டுநன்னெறிப்பட்டு ஈடேற்றத் துறையைநோக்கிச்செல்லும்படி செய்த பாவாத்துமாக்கள் அநேகாநேகரேயாம். பதிதருள்ளேயும், யூதருள்ளேயும், "பிறிமேசன்ஸ்" (Freemasons) எனப்படும் இரகசிய சபையாருள்ளேயும் பலரை மனந்திருப்பிப் பரிசுத்த மாதாவாகிய திருச்சபைமடியிற் சேர்த்துமுள்ளார்,

மேலே சுருக்கமாக உதாகரித்து விளக்கிக்காட்டிய பிரகாரம், அன்புருவரான அந்திரே பிறதர் அர்ச். சூசைமுனிவரன் திருநாமத்தைமுன்னிட்டு விசேஷதேவானுக்கிரகத்தைக்கொண்டு கடினமனம்படைத்த பாபிஷ்டரைத் தர்மிஷ்டராக்கியும், அபமரணம் அடையும் ஆபத்திலுள்ளாரைச் சுபமரணம் அடையச்செய்தும் அருளிவந்த ஆத்துமாரோக்கியங்களும், அவைகளுக்கு முன்னேடிகளாக அங்கவினர் அசாத்தியப் பிணியாளருக்கு அருளிவந்த அதிசயதேகாரோக்கியங்களும் வருடாவருடம் எண்ணிறந்து பெருகிவர, அவைகளைக்குறித்த அபிநவசமாசாரம் உத்தர, மத்திய, தெட்சண அமெரிக்காக் கண்டம் எங்கெங்குமே காட்டாக்கினிபோற் பற்றிப்பரந்துவர, அர்ச். சூசைமுனீந்திரரின அன்பையும், கருணையையும், தயாளத்தையும், அருட்திறத்தையுங்குறித்த அபூர்வஅறிவும் எங்கணுங்கொளுத்தப்பெற்று உடன்பரந்து வியாபிப்பதாயிற்று. வியாபிக்கவே, அவர்மீது அத்தியந்தபக்தியும், ஸ்திரமான நம்பிக்கையும் கொண்டவர்களானயாத்திரிகர்கள் ஆங்காங்கு நின்று இராசகுன்றின்மேல் நிலவுந் திருக்ஷேத்திரத்தைநாடிக் கும்புகும்பாகக் கொடிவிட்டுச் சரியத்தொடங்கினர்கள். தங்கள் கேடுபாடுகள், பீடைபிணிகளிலே தேவகைத்தாதையினது உபய பாதமே அபயமென்று ஓலமிட்டு அவரது ஆலயப்பதியிலே ஆஸ்பதந்தேடினர்கள். "இராசகுன்றின் அற்புதகிருத்தியர்" எனப் புதுநாமம் புனையப்பெற்றுப் பரிந்துபாராட்டப்படும் அந்திரே பிறதரை அபிமுகமாய்த் தரிசித்து, அவருடைய ஆலோசனையையும், அருட்கவிகையையும், ஆசீர்வாதத்தையும் அடைந்துகொள்ள அபேட்சித்து அவர்சமுகத்தையும் நாடினர்கள்.

(தொடரும்)

## அறிவித்தல்

யாழ்ப்பாணம், பெரியதெருவில் வெகுகாலம் உவாச் திப்பயராக இருந்த தம்முடைய ஊர் சென்றவரான எம். டி. யோசவ் நீக்கலஸ் அப்புகாமி இம்மாதம் 10-ம் திகதி தொடக்கம் யாழ்ப்பாணத்தில் இருப்பார். ஆர்மோனியம், பியானே ஆகியவைகள் அவரால் திருத்திக்கொடுக்கப்படும். தேவையானேர் கீழ்க்காணும் விலாசத்துக்கு எழுதுக.

"மசனெட் இல்லம்"
7, 4-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்

---

## நேர்த்தியின் பூர்த்தி

பரிசுத்த சதாசகாயமாதாவே! நீர் எனது நாவிலுண்டான வருத்தத்தை எவ்வித மருந்துமின்றியே யான் உம்மிடம் மன்றுடியதால், அற்புதவிதமாய்க் குணமாக்கினீர். அதற்கு என் மனப்பூர்வமான நன்றி கூறுகிறேன். உமது நாமம் என்றும் எங்கும், எல்லோராலும் புகழப்படுவதாக. தாயே! பிரசுர தாமதத்திற்கு மன்னிப்புக் கேட்கிறேன். நேர்த்திகடன்படி பிரசுரிக்கிறேன்.

பம்பலப்பிட்டி. எம். என்,

* * *

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

மனநோய்தீர்க்கத் தளராத தயவுடன் மன்றுடிக்கேட்பவர்களை மனக்களிப்படையச்செய்யும் எங்கள் நேசத்தாயாராகிய பரிசுத்த சதாசகாயமாதாவிடம் நான் வருந்திக்கேட்ட விண்ணப்பங்கள்யாவும் கிடைத்து, மனப்பூரிப்படைந்ததையிட்டு நானும், என்குடும்பமும் என்றும் நன்றியுள்ளவர்களாக இருப்போம். இன்னும் எங்கள் குடும்பத்தை எவ்வழியுள்ளகாலமும் ஆசீர்வதிக்க வேண்டுமென்று மன்றுடுகிறேன்.

எலிசபேத் பேனுட்
மலாயா

---

## உயர்ந்தஇனச் சாராயம்

விஸ்கியைப்போன்று திறமான சாராயம் தயாரிக்கக்கூடிய தனிப்பட்ட பேர்களுக்கு அன்றேல் ஸ்தாபனங்களுக்கு லைசென்ஸ்வழங்க உள்நாட்டு மந்திரி காரியாலயம் தீர்மானித்திருக்கிறது. இந்தமாதிரியான திறம்சாராயம் தயாரிக்க அரசாங்கம் ஏற்கனவே ஒருவருக்கு லைசென்ஸ் வழங்கியுள்ளது. உயர்ந்த குடிவகைகளை இறக்குமதிசெய்ய வெளிநாடுகளுக்குச் செல்லும் பணத்தை உள்நாட்டிலே புழங்கச் செய்வதே இதன் நோக்கமாகும்.

உரோமைக் கடிதம்

# திருமறைத் தந்தையின் தினவாழ்க்கை

— நீ. ம. சவிரிமுத்து —

அன்று ஒருசிலருக்குமட்டும் அவரைத்தெரியும். அது அந்தக்காலம். இப்போது காலம்மாறிவிட்டது. இன்று அவர்பெயரைக்கூடக் கேட்டறியாதமக்கள் இருப்பார்களா, என்ன? ஆட்சிகாலம் அரைவருடமாகவில்லை. ஆனால், மக்கள் அவரைநன்கு மதிக்கின்றார்கள். அவர்பால்அன்பு பாராட்டுகின்றார்கள். வயது சென்றுவிட்டது. இருந்தும், அதிகம்ஆற்றல் உண்டு, ஆர்வமுமுண்டு, முகத்திலே மலர்ப்புன்னகைஉண்டு. அவர்தான் நம்முடைய பரிசுத்ததந்தை 23-ம் அருளப்பர். அவருடைய நாளாந்த வாழ்க்கைதான் எவ்வாறு கழிகிறது? என்று அறிய எல்லோருமே விரும்புகிறார்கள்.

## அதிகாலை

பரிசுத்ததந்தை வழக்கமாகக் காலை நாலுமணிக்குப் படுக்கைவிட்டெழுகின்றார். காலைவேளைச் சுத்திகரிப்புகள் முடித்துவிட்டுத் தியானஞ்செய்கின்றார். ஏழுமணிக்குத் தம்முடைய சொந்தச் சிற்றாலயத்தில் திவ்விய பூசைப்பலி ஒப்புக்கொடுக்கின்றார். அது முடிந்து எட்டுமணிமட்டும் செபஞ் செய்கின்றார். ஆகவே, காலை நாலுமணிதொடக்கம் எட்டுமணிவரையும் காலைக்கடமைகளைச் செய்வதிலும், செபத்திலும் நேரம்போய்விடுகின்றது. சிலசமயம் காலை ஒன்று அல்லது இரண்டு மணிக்குமுதலாய் அவர்எழும்புவதுண்டு. இருக்கும்வேலையை முடித்தபிற்பாடுதான் மீளவும் உறங்கப்போகின்றார்.

## காலை நேரம்

எட்டுமணி, காலைஉணவு அருந்தும் நேரம். போசனம் முடிந்ததும் நேரே தம்முடையஅறைக்குச் செல்கின்றார். ஓர்சாதாரண மனிதர்அல்லவே பாப்பரசர். பதவிக்கேற்ற பொறுப்புண்டு. வேலையுண்டு. அந்தரங்ககாரியதரிசி அன்றுதினம் பதில் அனுப்பவேண்டிய கடிதங்களுடன் அவர் இருக்கும் இடத்திற்குவருகின்றார். கடிதங்களுக்குப் பதிலளித்தபின் வேறேதாவது முக்கிய விஷயம் இருந்தால் அதைப்பற்றிக் கலந்து ஆலோசிப்பார். சந்தேகம் ஏற்பட்டால், அருகில்இருக்கும் நூல்களை எடுத்துத் தெளிந்துகொள்வார். அவருடைய மேசையிலும், அதை அடுத்தும் புத்தகங்கள் உண்டு. அவைகள் மிகவும்பாரமானவை. சாரமும் அதிகம். மேசையிலே அன்றைய தினத்தாள்கள் இருக்கும். பத்துமணிமட்டும் உலகசெய்திகளைப் புரட்டிப் படித்துக்கொண்டிருப்பார்.

## பாப்பரசரின் பேட்டி :

பத்துமணிதொடக்கம் பன்னிரண்டுமணி வரையும்தான் பாப்பரசரை எவரும்சந்திக்க அனுமதிஉண்டு. சந்திக்கவருகிறவர்களின் தொகையோ அதிகம். அத்தனைபேரின் நிலைமைக்கும் வேறுபாடு இருக்கிறது. அரசர்கள், தேசத்தலைவர்கள் தொடக்கம் சாதாரண தொழிலாளர்வரை கண்டுபேசுவதற்கு வருவார்கள். உதாரணமாக, சென்றமாதம் பாப்பரசரைச் சந்தித்தவர்கள்: திபேத்நாட்டின் கொகிம்ட்றிக்ட்சிங் லாமா, வத்திக்கான் தொழிலாளருடையகுழந்தைகள், இத்தாலியச் சுதேசஇரத்தவங்கிக் கழகத்தினர், இமயமலையில் வெற்றிக்கொடிநாட்டிய ஷெற்பா டென்ஸிங் நோர்கே, வியாட் மோட்டார்வாகனக் கம்பெனித்தலைவர், சுவிஸ்வீரர்கள், அமெரிக்க ஆகாயப் படை இசைக்குழு, இத்தாலிய பொலிஸ்வீரர்கள் ஆகியோர். சென்றகார்த்திகைமாதத்திலே இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பர்மாபோன்ற கீழைத்தேசங்களைச்சேர்ந்த மக்களுக்கும், மாணவர்களுக்கும் பேட்டிஅளித்துள்ளார். மாசிமாதக் கடைசியிலே ஸ்பானிய சினிமா இளநட்சத்திரம் "மார்செலீனோ" (வழங்கும்பெயர்) என்னும் சிறுவனுக்கு விசேஷபேட்டி ஒன்று அளித்தார். இம்மாதஇறுதியில் எலிசபேத்மகாராணியாரின் தாயாரும், இளவரசிமார்களும் பாப்பரசரைச் சந்தித்தார்கள், இவைதனிப்பிரத்தியேகமானபேட்டிகள். இவைகளைத்தவிர, ஒவ்வொரு ஞாயிறுவாரமும் பொதுப்பேட்டி அளிப்பார். அவருடைய ஆசீர்வாதத்தைப்பெறுவதற்காகச் சதுக்கத்தில் ஆயிரமாயிரமாக மக்கள் கூடிநிற்பார்கள். பன்னிரண்டு மணிக்கு அவர் யன்னலண்டை வந்துநின்று காட்சியளிப்பார். "விவா இல் பாப்பா" என்ற மக்கள் முழக்கமும், ஆரவாரமும், "பங், பாங்" என்ற மோட்டர்வாகனங்களின் 'ஹோண்'சப்தமும் சிலநிமிடங்களுக்கு நீடிக்கும்.பின்னர் எல்லாமக்களுடனும் சேர்ந்து திரிகாலச்செபம் ஓதுவார். அதன்முடிவில் ஆசீர்வாதம் அளிப்பார். யார்யாருக்குப் பேட்டி அளிக்கிறார் என்பதுஅல்ல, எவ்வாறு பேட்டி அளிக்கின்றார் என்பதுதான் மக்கள் மனதைக் கவர்ந்துகொண்டிருக்கிறது.

## பிற் பொழுது :

பன்னிரண்டு மணிக்கு மத்தியானப் போசனம் அருந்தியபின் செபஞ்செய்வார். அதன்பின் நித்திரைக்குச் செல்வார், பின்னேரமானதும் அவருடைய கார் தயாராகநிற்கும். காரில் அமர்ந்து தோட்டத்திற்குச் செல்வார். அதைத் தோட்டமென்றுகூற வாய் கூசுகிறது. பூங்காவனம்என்றே கூறவேண்டும், பார்வைக்கு அழகானது. உள்ளத்திற்குக் குளிர்மையானது. அழகான செயற்கை நீரூற்றுகள் ஏராளமாகஉண்டு. எல்லாப்பூக்களும் மலர்வதற்குக் காலவரவில்லை. இருந்தும் பச்சை, சிவப்பு, நீலம், ஊதா ஆகியநிறங்களுக்குக் குறைவேயில்லை. அங்கே காரைவிட்டுஇறங்கி நேரே ஒருசிறுகெபிக்குச் செல்வார், மரியன்னையின் அழகானசுரூபம் வரவேற்றுக்கொண்டிருக்கும். நின்றநிலையில் தானே செபஞ்செய்தபின் உலாவத் தொடங்குவார். வழக்கமாக அவர் செல்லும் இடமெல்லாம் சுவிஸ்வீரர்களும் அணிவகுத்துச்செல்வார்கள், இதை அவர் விரும்பவில்லைப்போல் தெரிகிறது. உலாத்துமுடிந்ததும் வேறுகாரியங்களைக் கவனிக்க அலுவலகத்தை அடைவார். சிலசமயம் வாசிகசாலைக்கும் செல்வதுண்டு. ஏழேமுக்கால்மணிக்குச் சிஸ்ரைன் ஆலயத்திற்குச் செபமாலைசொல்லப்போவார். அவருடன் இன்னும் இருகன்னியர்கள் ஒன்றுசேர்ந்து செபிப்பார்கள். ஒவ்வொருகண்டத்திற்காகவும் ஒவ்வொருகாரணிக்கம் தினமும் ஒப்புக்கொடுத்துவருகிறார். 1-வது ஐரோப்பாவிற்காக, 2-வது ஆசியா, 3-வது அமெரிக்கா, 4-வது ஆபிரிக்கா, 5-வது ஆஸ்திரேலியா. "பாப்பாசர் முழுஉலகத்திற்காகவும் மன்றாடவேண்டும்" என்று அவரேகூறியுள்ளார். எட்டுமணிக்கு இராப்போசனம் ஆயத்தமாயிருக்கும். வழக்கமாக அவர் உறங்கச் செல்லும்நேரம் பத்துமணி.

## வாழ விரும்புகின்றாராம்

பாப்பரசர் கேவோர்ஸ்கன்னியர்களைச் சந்தித்துப்பேசிய பொழுது, "இப்போது, நாம் உங்களுக்காகவும், உங்கள்குடும்பங்களுக்காகவும், அத்து

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

# அங்கும் இங்கும்

### புத்தமதத்திற்கு மாறினல்மட்டும்

"இலங்கையில்இப்பொழுது ஒற்றை ஆட்சி முறையிலேயே அரசியல் நடைபெறுகின்றது. சிங்களவர் தமிழர்களைப் பலதுறையிலும் நசுக்குகின்றனர். இன்னும் மூன்று வருடங்களில் சிங்களம்தெரியாத ஊழியர்களை அரசாங்க சேவையினின்றும் விலத்தியவுடன் தமிழரசு தானுகவே தோன்றும். சிங்களத்தைக் கற்றாலும் புத்த மதத்திற்கு மாறினல்மட்டுமே எதிர்காலத்தில் அரசாங்க உத்தியோகங்கள் கிடைக்கும். ஆனல், இதை எந்தத் தமிழ்மகனும் செய்யான்என்பது திண்ணம்."

திரு. சி. வன்னியசிங்கம்,
கோப்பாய் எம். பி.

### இவற்றின் காரணம்என்ன ?

"மட்டக்களப்பிலும், திரிகோணமலையிலும் சிங்களக் குடியேற்றம் தீவிரமாக நடைபெற்று வருகின்றது. இந்தக் குடியேற்றத்தை நீடிக்கவிட்டால் தமிழர்கள் எல்லோரும் இந்துசமுத்திரத்தில் தள்ளப்பட்டுவிடுவார்கள், கிழ்மாகாணம் சிங்களச் சகோதரர்களின் இருப்பிடங்களாக விரைவில் மாறிவிடுவது நிச்சயம். தமிழ்மக்களின் கவலையீனமும், உற்சாகக்குறைவுமே இதற்குக்காரணமென்று சொல்லலாகும்."

திரு. சி. வன்னியசிங்கம்,
கோப்பாய் எம். பி.

### மந்திரிகள்சிலர் தூண்டினரா ?

"வகுப்புக் கலவரங்களுக்குச் சிங்களத் தொழிலாளர்கள்தான் காரணமென்று கூறுவது தவறு. தமிழர்களின் கடைகளையும், ஏனைய வியாபாரஸ்தாபனங்களையும் உடைத்துநொறுக்கச் சிலபேர்களை மந்திரிகளில் சிலரே தூண்டினர்களென்று நான் தயக்கமின்றிக் கூறுவேன்."

திரு. ஜே. பத்திரான,
வழக்கறிஞர், குருநாகல்

### உரிமைப் போராட்டமும் மொழிப் போராட்டமும்

"தமிழுக்கும், சிங்களத்துக்கும் சமத்துவம் அளிக்கப்படவேண்டுமென்று இலங்கைச் சமசமாஜகட்சி தொடர்ந்து வற்புறுத்திக்கொண்டே வருகிறது. இதன்பொருட்டு நாம் எத்தகைய தியாகத்துக்கும் தயாராயிருக்கிறோம். சிறுபான்மையினரின் உரிமைப்போராட்டம் மொழிப் போராட்டத்துடன் இணைக்கிறப்படுவதை நமதுகட்சி உணர்ந்திருப்பதே இதற்குக்காரணம். நாம் செல்லும் பாதை கஷ்டமானதாயிருக்கலாம். அதற்காக நமது எண்ணத்திற்கேற்க இலகுவான பாதையை நாடமுடியாது."

திரு. ஒஸ்மன்ட் ஜயரத்ன,
ச. ச. கட்சிப் பிரமுகர்

### ஸ்திரமற்ற ஓர் கலவையா ?

"எம். ஈ. பி. அரசாங்கம் பதவிக்கு வந்தபின் கடந்த மூன்றுவருடகாலத்திலும் இந்நாட்டுக்கு நேர்ந்துள்ள அனர்த்தங்களையிட்டு நான் நீளமாக எடுத்துரைக்கவேண்டிய அவசியமில்லை. இவைகள் நேருமென்று இருவருடங்களுக்குமுன்னரே நாம் சொல்லியிருந்தோம். ஐக்கியதேசியக்கட்சியைத் தோற்கடிக்கவேண்டுமென்ற ஒரேயொரு நோக்கத்துடன் ஒன்றுபட்ட ஒருசிறுகூட்டம் எப்போதும் ஸ்திரமற்ற ஓர்கலவையாகவே இருக்குமென நாம் உணர்ந்திருந்தோம். அடிப்படைக் கொள்கையிலுஞ்சரி, வேறுகொள்கைகளிலுஞ்சரி பிளவுபட்டவர்களாக லட்சியங்களையோ, கொள்கைகளையோ மதிக்காமல் பதவியில் ஒட்டிக்கொண்டிருக்கும் ஒரே அவலுடன் இவர்கள் இந்நாட்டின் அழிவுப்பட்டலத்தைநோக்கி முன்னேறிக்கொண்டிருக்கிறார்கள்.

திரு. டட்லி சேனநாயகா
முன்னைநாள்பிரதமர்

### உதைத்துத் தள்ளுமுன் ....

"உதைத்துத் தள்ளுவதற்கு முன்னமே வெளியேறிவிடுங்கள் என்பதுதான் அரசாங்கத்தின் முற்போக்குக் கொள்கைகளுக்குத் தடையாயிருப்பவர்களுக்கு நான் விடுக்கும் கடும்எச்சரிக்கை. இங்கிலாந்துமுறைகள் இந்த நாட்டுக்கு உதவாதவைகள். இந்த நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு ஏற்றவகையில் சட்டங்கள் இருக்கவேண்டும்."

திரு. பிலிப் குணவர்த்தன,
உணவுமந்திரி

### வேண்டுகோள் விடுக்கின்றார்

"கடந்தகாலத்திலே மொழிப்பிரச்சினையால் நிகழ்ந்த தவருன சம்பவங்களைமறந்து, இனிச் சகோதரஉணர்ச்சியுடன் சமரசமாகவாழ்வோம். சமரசத்தையும், சகோதரத்துவத்தையும் உண்டாக்கவேண்டிய மகத்தான பொறுப்பு ஆசிரியர்களைச் சார்ந்ததாகும். இதுவிஷயமாய் அரசியற் கட்சிகளை இனிமேலும் நம்பவேண்டாம். அவைகள் சகோதரத்துவத்துக்குப் பதில் சத்துராதி மனப்பான்மையைத்தான் வளர்த்துக்கொண்டிருக்கின்றன."

செனற்றர் ஏ. டி. ஜயசேகர,
தமிழ், சிங்கள, ஆங்கில
ஆசிரியர்சங்கங்களின்
முக்கூட்டுச்சபைத் தலைவர்

### செயல்முறையில் வெற்றிபெறமுடியாது

சிறுபான்மையினரின் ஒத்துழைப்பில்லாமல் "தனிச்சிங்களசட்டத்தை என்றுமேபூரணமாக நடைமுறைக்குக் கொண்டுவரமுடியாது என்பதில் திடமான நம்பிக்கை எனக்குண்டு. தமிழர் தமிழைழக்கைவிட்டுச் சிங்களம்கற்கும் நிலை வருமென ஒருபோதும் நம்பமுடியவில்லை. கடுநிலைமையுடன் நான் ஆராய்ந்தபோது தனிச்சிங்களசட்டம் செயல்முறையில் என்றும்வெற்றிபெறமுடியாதென்பதை உணர்ந்துகொண்டேன். அதைப்பண்டாரநாயகாவாலோ, மந்திரிசபையாலோ நடைமுறைக்குக் கொண்டுவரமுடியாது. ஒருவேளை நம் மத்தியில் துரோகிகள்தோன்றினல் தனிச்சிங்களசட்டம் செயல்முறையில் வெற்றிபெறக்கூடும்."

திரு. எஸ். எச், பேரின்பநாயகம்,
கொக்குவில் இந்துக்கல்லூரிஅதிபர்

### சதாஓடிக்கொண்டேயிருக்கும்

"பாயும்ஆற்றைக் கடந்துசெல்வதற்காக வந்தமனிதன் அவ்வாறுசெய்யமுடியாமல்போகவே கரையில் அமர்ந்துகொண்டான், ஆறும்வற்றும், தானும் ஆற்றைக் கடக்கலாமென எண்ணினன். பார்த்துக்கொண்டேயிருந்தான். ஆனல், ஆறுவற்றவில்லை, அவனுக்கும் கடந்துசெல்ல முடியவில்லை. இதைப்போன்றுதான் எம். ஈ. பி, ஆற்றைக்கடக்கத் திரு. டட்லிசேனநாயகா ஆற்றங்கரையில் காத்துக்கொண்டிருக்கிறார். ஆனல்,அவருக்கு நான் ஒன்றுமட்டும் கூறவிரும்புகிறேன். எம்.ஈ.பி.ஆறு சதாஓடிக்கொண்டேயிருக்கும். அது ஒருகாலமும் வற்றப்போவதில்லை. திரு. டட்லிசேனநாயகாவும் அதை எப்பொழுதாவது கடக்கப்போவதுமில்லை."

பிரதமர் பண்டாரநாயகா

### எந்த அடிப்படையில் .... ?

"கடந்தமூன்றுவருட காலத்திலும் எம். ஈ. பி. அரசாங்கம் நாட்டுக்கென்று நல்லகாரியம் எதையும் சாதிக்கவில்லை. அதற்குப்பதில் நாட்டிலே வகுப்பு வெறியையூட்டி இரத்தஆறு ஓடச் செய்தது. சாதி, மத அடிப்படையில்தான் இப்போது நிர்வாகம் நடந்துகொண்டிருக்கிறது."

திரு. ஒஸ்மன்ட் ஜயரத்ன,
ச. ச. கட்சிப் பிரமுகர்



# புனிதவீரர் பக்கம்



*அருமைச் சகோதரங்களே !*

மாதாவின் வணக்கமாதத்தை ஆரம்பித்துவிட்டோம். நாள்தோறும் உங்கள் ஆலயங்களில், அல்லது பள்ளிக்கூடங்களில் இந்த வேண்டுதல்கள் நடக்கும். அவைகளில் ஊக்கமாய்ப் பங்குபற்றலாம்.

முதலாவது: மாலைவேளைகளில் செபமாலை, மரியன்னையைப்பற்றிய தியானம், ஆசீர்வாத ஆராதனை ஆகியவற்றில் பங்குபற்றலாம்.

இரண்டாவது: காலையில் திவ்விய பூசைகண்டு வணக்கமாத நாட்களைப் புனிதப்படுத்தலாம்.

மூன்றுவது: தேவ அன்னையின் சுரூபத்தையோ, படத்தையோ அலங்கரித்து, மெழுகுவர்த்திகள், விளக்குகள் வைத்து பூக்கள் சாத்திவரலாம்.

வைகாசிமாதம் பெய்யும் பனித்துளியில் பெண்கள் முகங்கழுவினல் வெகு அழகு உண்டாகும் எனக் கூறப்படுகிறது. உடல் அழகைவிட்டு, உள அழகைத்தேடிக் காலைதோறும் பீடத்திற் சொரியும் திரு இரத்தத்தில் மூழ்கிக் குளிப்போம். அப்போது எமது உள்ளம் உண்மை அழகுபெறும்.

அன்னை

—(⌓)—

## ஏழையின் இதயம்

மாதா கோவிலின் படிக்கட்டில் மகிழ்வுடன் இருந்தான் மணி. அவன் உள்ளம்,

"அன்னை மரியே! அன்னை மரியே!
— எனை

ஆட்கொண்ட அன்பின் சோதியே" என்ற அடிகளை வாய்மூலம் வெளிப்படுத்தியது. இதனைக்கண்ட அவன் நண்பர்கள், அயலவர்கள் யாவரும் ஆச்சரியமுற்றனர். ஏனெனில் அன்றுபோல் அவன் ஆனந்தமாகப் பாடியதை அவர்கள் கண்டதில்லை. அந்த மணிக்கா இத்தனை ஆனந்தம்? அவன் மகிழ்ச்சி என்பதை அறியாத சிறுவன். அவனுக்கு இன்று எங்கிருந்துதான் இத்தனை குதூகலம் வந்ததோ?

மணி ஓர் ஏழைச் சிறுவன். அவன் பெற்றூர் யார்? என்பதை அவன் அறியான். அவன் பிறந்ததும் அவன் தந்தை தாயார் அவனைப் பிரிந்து ஆண்டவரிடம் சென்றிருக்க வேண்டும். யாரோ வளர்த்தார்கள். ஆனுல், இன்று அவன் யாருமற்ற அனுதை. இப்படிப்பட்ட மணி எப்படி ஆனந்தமாய் ஆடிப்பாட முடியும்?

அவன் பிச்சை எடுத்தான். வறுமை அவனை மார்புடன் அணைத்துக் கொண்டு இருந்தது. ஆனுல், அகத்தில் குடிகொண்ட செம்மையை அதனுல் அழிக்க முடியவில்லை.

பிச்சை எடுத்தும் பிறருக்கு உதவினன். "அம்மா பசிக்குது, தாயே பசிக்குது" என்று அவன் இரந்து கேட்டால் அச்சொல் அன்பில்லாரையும் ஆட்டிவைக்கும். "இதயமே! இரக்கும்பொழுதும் இறைவனை மறவாதே" என்பது அவன் மனம் ஓதும் மந்திரம். காலையும் மாலையும் மாதா ஆலயத்திற்குச் செல்வான். பல சமயங்களில் அந்த ஆலயமே அவனது படுக்கை அறை. தேவ தாயே அவனைத் தாலாட்டி நித்திரையாக்கும் தாய்.

இவன் செயல்களையும், இடையருத தேவபக்தியையும் இடையருது இரண்டு கண்கள் கவனித்தன. அப்பரிசுத்த கண்கள் மணியிடம் பரிவு கொண்டன. ஓர்நாள் மாதா சுருபத்தின் அருகில் ஒருரூபா நோட்டு ஒன்று கிடந்தது. ஏழைப் பையனுக்கு அது ஒருகோடி ரூபா அல்லவா? ஆனுல் அவன் அதை எடுத்துக் காணிக்கைப்பெட்டியிற் சேர்த்தான் இதைவிட அவன் நேர்மைக்கு என்ன சான்று வேண்டும்?

சிறிது நேரத்தில் மணியின் அருகில் அக்கோவில் கட்டளைக்குரு நின்றூர். அவர் மணியை நோக்கி, "மகனே! நீ சிறியவனுய் இருந்தும், வறியவனுய் இருந்தும் நேர்மையிலும், தேவபக்தியிலும் பெரியவன். நீ பிச்சை எடுக்கவேண்டாம், என்னுடனேயே இரு. என்னுல் இயன்ற அளவு படிக்க வைக்கிறேன்" என்று கூறி அவனை ஆசீர்வதித்தார்.

மணி இப்பொழுது பாடசாலையில் திறமையுடன் படித்துக்கொண்டும், மிகுதி நேரங்களில் குருவிற்குச் சிறு ஊழியம் செய்துகொண்டும் இன்பமாக வாழ்கின்றுன். இப்பொழுது அவனுக்கு ஆனந்தம்பொங்க என்னதடை? பிள்ளைகளே, நீங்களும் மணியைப்போல் தேவபக்தியிலும், நேர்மையிலும் மேம்படுவீராயின் உங்களை ஆண்டவர் கட்டாயம் ஆசீர்வதிப்பார்.

---

## ஆராய்ந்து கொள்ளாத நட்பு

(ஜெயம்)

தவளை யொன்று குளத்தினில்
தனிமை யாக வாழ்ந்தது
கரையில் வந்த எலிதனைக்
கண்டு நட்புக் கொண்டது.

பிரிய நண்பர் இருவரும்
பிரிந்திடாது வாழவே
சிறிய சோடிக் கால்களைச்
சேர்த்துக் கட்டிக் கொண்டனர்.

பச்சைக் குளத்தின் அழகினைப்
பால்ய நண்பன் காணவே
இச்சை கொண்ட தவளையும்
இறங்கி நீரிற் பாய்ந்தது.

எலியும் குளத்தில் வீழ்ந்தது [து
இமைக்கும் பொழுதில் மாண்ட
அலையும் நீரின் அலையிலே
ஆடி யாடி வந்தது.

மிதக்கும் எலியை வானிலே
மிதந்த பருந்து கண்டது
கணத்திற் கொத்திக் கொண்டது
களிப்பி னேடு சென்றது.

தவளை எலியின் காலுடன்
தானும் சேர்ந்திருந்ததால்
அவல மாகச் செத்தது.
ஆய்ந்து நட்புக் கொள்ளுவாய்

## அரைச்சல்லிக்கும் உதவமாட்டான்

அந்த ஊரிலே ஒரு சிறிய குடும்பம் வசித்திருந்தது. கணவனின் பெயர் தாசன். மனைவியின் பெயர் மலர். தம்பதிகள் இருவருக்கும் செல்வமைந்தனுகஉதித்தான் துரை. தந்தை தாசன் இராணுவத்தி கமான்டராக வேலைசெய்தவர். ஆனுல், துரையின் வாலப்பருவத்தில் தந்தை இறந்துவிட்டார்.

துரை சுதந்திரமாக வாழ்ந்து வந்தான். அவனுக்குக் கவலைகள் ஒன்றுமில்லை. வீட்டிலே கட்டுப்பாடு என்பது எள்ளளவும் கிடையாது. வயது எட்டாகியும் பள்ளிப் படிப்பைத் தொடக்காது விடுகாலி மாடாகத் திரிந்தான் அவன். பொறுத்தேபொறுத்திருந்த தாய் ஓர் நாள் அவன்மேல் பொங்கியெழுந்தாள்.

மெல்லமெல்ல அவனை வையத் தொடங்கினுள். அன்னையின் முயற்சிகள் எல்லாம் முயற்கொம்பாயின. ஒருநாள் அன்னை துரையைப் பார்த்து, "தந்தை இன்றிக் கைம்பெண் செல்வமாகவளர்த்த கழுதை இதுதான்: அரைச்சல்லிக்கும் உதவமாட்டான்; என உலகம் ஏசப்போகுதே" என்று ஏசினுள். அன்னையின் அடுக்குமொழிகள் அவனது மூளையில் கோணலாகப் பதிந்தன.

அன்று மதியந்திரும்புமுன் துரை ஒரு 25 சதக் குற்றியை எடுத்து அரும்பாடுபட்டு விழுங்கிவிட்டான். அன்று சாயந்தரம் அவனுடைய அன்னை வழக்கம்போல அவனை ஏசத் தொடங்கினுள். உடனே அவன் தாயைப்பார்த்து, "அம்மா, நீங்கள் என்னை அரைச்சல்லிக்கும் உதவான் என்று ஏசினீர்கள்; இனிமேல் அந்தப்பேச்சை விட்டுவிடுங்கள்; நான் அரும்பாடுபட்டு ஒரு 50 சதக்குற்றியை விழுங்கிவிட்டேன்" என்றுன். அன்னை உருண்டு உருண்டு சிரிப்பதோ, புரண்டு புரண்டு அழுவதோ என்று தெரியாது திகைத்தாள். பின் அவனுக்குவேண்டிய சிகிச்சை செய்தாள். அதுமுதல் துரை பள்ளி சென்று படித்துவந்தான்.

ஏ. சி. ர். நாதன்,
இளவாலை.

---

## அர்ச். வலன்ரைன்

மாசிமாதம் 14-ந்திகதி திருச்சபை இவரது திருநாளைக்கொண்டாடுகின்றது. இத்தினத்தில்பலர் தங்கள் சிநேகிதருக்கும், உறவினருக்கும் "வலன்ரைன் காட்" அனுப்புவது வழக்கம். இவ்வழக்கம் பலவருடங்களாக நடைபெற்று வருகிறது. இந்த அர்ச்சியசிட்டவர் ரோமாபுரியில் ஒரு குருவாக இருந்தார் வேதகலாபனை காலத்தில் பிடிபட்டு மறியலில் வைக்கப்பட்டார். இவர் மறியலில் இருக்கும்போது தமது கத்தோலிக்க மக்களுக்கு வாழ்த்துக்கள் அனுப்புவது வழக்கம். இந்தவழக்கத்தை இவர் இறந்தபின்பும், இவரின் ஞாபகமாக இன்றுமே கத்தோலிக்கமக்கள் பலர் அனுஷ்டித்து வருகிறுர்கள்.

---

## கபிரியேல் சம்மனசானவர் காணப்பட்ட இடத்திலே

பாரம்பரிய வரலாற்றின்படி, கபிரியேல்சம்மனசானவர் தேவதாய்க்கு மங்களவார்த்தை சொன்ன — அதாவது அவள் யேசுவின் தாயாய் இருக்கப் போவதாகத் தெரிவித்த இடத்திலே நசரேத்தூர் 7,00,000 பவுண் செலவில் கட்டியெழுப்பப்படும் புதிய தேவாலயம் ஒன்றைக் கொண்டிருக்கப் போகிறது. அந்த இடத்தில் எழுப்பப்படும் நான்காவது ஆலயமாகியஇது யூதர்களின் இஸ்ரேயேல் நாட்டிலும், அநேகமாய் மத்தியகிழக்கு நாடுகளிலும் மிகப்பிரமாண்டமானதாயிருக்கும். 18-ம் நூற்றுண்டிலே அதில் கட்டப்பெற்ற கடைசியான ஆலயம் இற்றைக்கு ஐந்து வருடங்களின்முன் இடிக்கப்படலாயிற்று. பிரபல இத்தாலிய சிற்பியும், மிலான்நகர சர்வகலாசாலையிலே சிற்பக்கலைப் பேராசிரியருமான ஜியோவான்னி மியுஸியோ என்பவரால் நிர்மாணிக்கப்பட்ட புதியஆலயத்தின் மாதிரிப்படத்தைப் பரிசுத்தஸ்தானம் அங்கீகரித்துள்ளது. ஆலயம் 160 அடி உயரமுடையதாயிருக்கும். கபிரியேல் சம்மனசானவர் காணப்பட்ட இடத்தைக் குறிப்பதாக நம்பப்படும் தூண் ஒன்றை அடக்கிய குகையை இந்தஆலயம் மூடியிருக்கும்.

## படுக்கை அறையில் யூபிலிப்பூசை

இங்கிலாந்திலே நொட்டிங்காம் நகரின் எஸ்லிஸ்மேற்றிராணியார் அன்று ஓர்படுக்கைஅறையில் நிறைவேறிய திவ்வியபூசைக்குச் சமூகமளித்திருந்தார். படுக்கையில்இருந்தவர் அம்மேற்றிராசனத்தின் இளைப்பாறிய ஓர்குருப்பிரசாதியாகிய 78வயதுடைய கனன்லேயோ மோயென்ஸ்சுவாமியாரே. இவர் அன்றுதினம் தமதுகுருத்துவ 50-ம்வருடதங்க யூபிலியைக் கொண்டாடினர். பாப்பரசரின் விசேஷஆசீர்வாதத்தையும் மேற்றிராணியார் அவரிடம் கொண்டுசென்றூர். தேவதோத்திரபூசை நிறைவேறியபோது அவருடையபடுக்கையைச்சூழவா அவரின்உறவினரும், அன்பர்களும் முழந்தாட்படியிட்டிருந்தார்கள். அந்தஅறையை ஐம்பது ரோசாப்புஷ்பங்கள் அலங்கரித்திருந்தன. யூபிலிநாயகர் ஓர்பெல்ஜியர். மலின்ஸ்நகரின் கீர்த்திவாய்ந்த கருதினல் மேர்சியர் ஆண்டவராலே குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெற்றவர். அப்போது வைத்தியசாஸ்திரம்படித்துக்கொண்டிருந்த இவர் தேவஅழைத்தலை மேற்கொண்டு குருமடத்திற் சேர்ந்துபடித்துக் குருவாயினர்.

---

இறைவன் எமது உள்ளத்தில் இன்றேல், எமது பகல் இரவாகும்; அவர் இருப்பரேல் எமது இரவு எல்லாம் பகல். — அர்ச். பிரான்சிஸ் சேல்ஸ்

## திருமறைத் தந்தையின் ...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

டன் பாப்பரசருக்காகவும் மன்றாடுவோம். ஏனெனில், உண்மையைக் கூறவேண்டுமானல், நாம் அதிக நாளைக்கு வாழவிரும்புகிறோம்; வாழ்வதற்கு நமக்கு விருப்பம்" என்று கூறியுள்ளார். றெஜீனுச்சேலிச் சிறைச்சாலைக் கைதிகளை நோக்கி: நம்முடைய உறவினர்களில் ஒருவர் அனுமதிச்சீட்டு இல்லாது வேட்டையாடச்சென்றார்; பொலீஸ் ஒருவரால் கைதுசெய்யப்பட்டு ஒருமாதச்சிறைக்கு அனுப்பப்பட்டார்" என்று உருக்கத்துடன் கூறினர்.

### புரட்சி வீரன் :

பாப்பரசர் வத்திக்கான் வரலாற்றில் அநேகமாறுதல்களை இதுவரைசெய்து விட்டார். மற்றப்பாப்பரசர்கள் வத்திக்கானைவிட்டு வெளியேபுறப்பட்டது மிக அருமை. இவர் அப்படியல்ல. ரோமைநகர்வீதிகளிலே நடந்துசெல்வதில் இவருக்குத் தனி இன்பம். கார்ச்சாரதிக்கும் சிலசமயம் 'டிமிக்கி' கொடுத்து விடுகிறார். ரோமை மேற்றிராணியார் என்றமட்டிலே ரோமைநகரைத் தரிசிப்பதற்குத் தமக்குக் கடமைஉண்டென்று சாதிக்கிறார். தபசுகாலத்தில் வெளியேஉள்ள கோவில்களுக்குச்சென்று மக்களுடன் திருச்சடங்குகளில் பங்குபற்றியும் இருக்கிறார். உணவருந்த விருந்தினராகப் பழையநண்பர்களை அழைப்பதும்உண்டு. வேதபோதகக் குருமடத்தில் கல்விபயிலும் மாணவர்களில் மிகவும்பிரியம் அவருக்கு. சிலசமயம் பலகாரம், இனிப்புகள் அனுப்புவார். உத்தானத் திருநாளன்று பெரிய பெட்டி ஒன்று அனுப்பியிருந்தார். அதற்குள் ஒன்றரை அடிஉயரமும், முக்கால்அடி அகலமும், முட்டைவடிவமுமான சொக்லேற்இருந்தது. முன்பக்கத்தில் பாப்பரசரின் முத்திரையும் பொறிக்கப்பட்டிருந்தது. இதை "ஈஸ்றர்முட்டை" என்று அழைப்பார்கள்.

இருமாதங்களுக்குமுன் வத்திக்கான்இராச்சியத்தில் ஒருஅமெரிக்க "மீவான்கலம்" [ஹெலிகொப்டர்] முதல்முறையாக இறங்கியது. பாப்பரசர் அதைஆசீர்வதித்தார். "இவ்வானவெளிக்கு மேலெழுவதுபோல், எமதுமனமும் தெய்வீகபொருட்களை நோக்கிஎழும்ப இறைவன் துணைபுரிவாராக" என்பது அவர் இயற்றிய செபம்.

வயதுசென்றும் இளமை குன்றாத பாப்பரசர் வாழட்டும்! அநேகவருடங்கள் வாழட்டும்!! என்று இறைவனை வேண்டுவதல்லாது, வேறுஎன்ன எம்மால்செய்ய முடியும்? இப்புனிதரின் ஆட்சியில் இறைவனின்பெயர் எத்திக்கும் பரவட்டும், கிறீஸ்துநாதரின் செங்கோல் உயரட்டும், திருமறையின் பெரும்புகழ் கமழட்டும் என்பது எமது தணியாத ஆவலாக இருக்கட்டும்!!

பரிசுத்ததந்தை! வாழ்க! நீடூழி வாழ்க!

---

### நன்றியறிந்த தோத்திரம்

பரிசுத்த பாத்திமா—சகாயமாதாவின் மன்றாட்டினால் எனது எஸ். எஸ். சி. பரீட்சையிலும், ஆசிரிய கலாசாலைகளுக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிவதற்காய நேர்முகப் பரீட்சையிலும், பயிற்றப்பட்ட ஆசிரிய தராதரப்பரீட்சையிலும் சித்தியடைந்தேன். பரிசுத்தபாத்திமா—சகாயமாதா எனக்குச் செய்த இந்த உதவிகட்காகவும், அத்திருத்தாயார் புரிந்துவரும் மற்றும் அநேக நன்மைகளுக்காகவும் நன்றி கூறுகிறேன். பரிசுத்தபாத்திமா—சகாயமாதாவின் நாமம் என்றும், எங்கும் எல்லோராலும் புகழப்படுவதாக. பிரசுரதாமதத்திற்கு மன்னிப்புக்கோருகிறேன். நேர்த்தியின்படி பிரசுரிக்கிறேன்.

மரியாயில் என்றும் நன்றியுள்ள

பம்பலப்பிட்டி. எம். என்.

## கேள்விப்பத்திர அறிவித்தல்

புலோப்பளை, கிராமப்பகுதியில் கீழ்க்குறிப்பிடும் இருவேலைகட்கும் சீல்வைத்த பதிவுத் தபால் மூலம் கேள்விகள் 20-5-59 நடுப்பகல் 12 மணிவரை புலோப்பளை, கிராமப்பகுதி நிர்வாகஸ்தரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் கட்டுப்பணமாக முறையே: ரூபா 50, ரூபா 25 கட்டுவதின் பேரில் கிடைக்கப்பெறும் பத்திரங்களில் பூர்த்திசெய்து அனுப்பப்படவேண்டும். கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும் கடைசித் திகதி 18-5-59 ஆகும். மேற்கொண்டு தேவைப்படும் விபரங்களைக் கிராமப்பகுதிக் காரியாலயத்திலிருந்து அறிந்துகொள்ளலாம்.

1. பளை, சந்தை நிலத்தில் ஒரு கட்டடம் அமைத்தல்.
2. பளை, பஸ் ஸ்ராண்ட் அருகாமையில் நாலு அறையிற் கக்கூசு கட்டுதல்.

A. A. யோசேப்,
நிர்வாகஸ்தர்.

புலோப்பளை கிராமப்பகுதி,
பளை. 27-4-59

---

### வண. எஸ். ஏ. பெஞ்சமின் சுவாமி அவர்களின்

## 21-ம் வருட மரண ஞாபகம்

மனுமக்கள்மீது வைத்துள்ள எல்லையற்ற நேசத்தால் சகலவித பாடுகளும், வேதனைகளும்பட்டு உயிரையும் பலிகொடுத்த நேச யேசுவே! தேவரீரால் இவ்வுலகினின்றும் அழைத்துக்கொள்ளப்பட்ட வண. எஸ். ஏ. பெஞ்சமின் சுவாமியாரின் ஆத்துமத்திற்கு நித்திய சமாதானத்தையும், பிரகாசத்தையும் தந்தருளும்.

அவரின் ஆத்தும இளைப்பாற்றிக்காக வதிரி, அர்ச். அந்தோனியார் கோவிலில் வைகாசிமாதம் 13-ம் திகதி காலை 6-30 மணிக்கு ஒரு திவ்வியபலிப்பூசை நிறைவேற்றப்படும்.

வ. அக்கேஸ்பிள்ளை,
வதிரி, கரவெட்டி.

---


## விளம்பரம்

இனியதமிழில் எவருக்கும் இலகுவில் விளங்கக்கூடியமுறையில் தயாரித்த கீழ்க்காணும் சத்தியவேதநூல்கள் கொழும்பு, கத்தோலிக்க புத்தகசாலையில் சகாயவிலையில் விற்பனையாகின்றன. இன்றேவாங்குங்கள்! நன்றே படியுங்கள்!!

| | ரூ. ச. |
|---|---|
| திருச்சபைச் சரித்திரம் ... | 2–50 |
| சிறுவருக்குரிய ஞானோபதேச நூல்கள் ... | 2–50 |
| ஆண்டவரும், உலகஇரட்சகருமாகிய யேசுக்கிறீஸ்து நாதருடைய பரிசுத்த புதியஏற்பாடு ... | 4–75 |
| கத்தோலிக்க ஆசிரியர் பொக்ஷம் ... | 2–00 |
| ரிட்சுவாலே (தமிழ்மொழி பெயர்ப்பு ... | 3–00 |
| கர்த்தரின் பாதை ... | 2–50 |
| மரியாயின்சேனை அப்போஸ்தலரின் சரிதை ... | 2–50 |
| சமதர்மமும், சமூகதர்மமும் ... | 1–10 |
| இதுதான் கருத்தடை ... | 0–75 |
| காதல் கனிவு ... ... | 1–50 |
| தினசரி பூசைப்புத்தகம் ... | 12–00 |
| லூர்துநகர்காட்சிகள் மெய்யா அன்றேல் பொய்யா ... | 1–40 |
| மன்ரேசா ... | 3–00 |
| வாழ்விக்கும் வள்ளல் கிறீஸ்துநாதரைப்பற்றிய கட்டுரைக் கோவை ... | 2–75 |

கொழும்பு, கத்தோலிக்க புத்தகசாலை,
நம். 159, ஸோ றீஸ்ரேட், கொழும்பு.
போண் நம். 5500


### ஆசிரியர் வ. மு. யோண்பிள்ளை அவர்களின்

## மரண அறிக்கை

நாவற்குழியைத் தமது பிறப்பிடமாகக் கொண்டவரும், கொழும்புத்துறை, அர்ச். சூசையப்பர்சபைச் சந்நியாசர் ளில் ஒருவராயிருந்து காலஞ்சென்ற சங். பிறதர் லீனஸ் அவர்களின் சகோதரரும், மிருசுவில், றோ. க. பாடசாலை ஆசிரியர்களில் ஒருவரான பண்டிதர் செ. செல்வரெத்தினம் அவர்களின் மாமனும், யாழ்ப்பாணம், அர்ச். ஆரோக்கியநாதர் பாடசாலை உதவித் தலைமை ஆசிரியருமான வ. மு. யோண்பிள்ளை அவர்கள் தமக்குண்டான இருதயநோய் காரணமாகப் பலவிடங்களிலும் பல சிகிச்சைகள் செய்யப்பெற்றும், குணமுறாது ஈற்றில் அந்திய தேவதிரவிய அநுமானங்களைப் பூரண அறிவுடன் பெற்றுச் சென்ற சித்திரைமாதம் 11-ம் திகதி சனிக்கிழமை காலை 5 மணியளவில் காலஞ்செல்லலாயினர். மரிக்கும்போது இவருக்கு வயது 49. இவருக்கு இரு புத்திரர்களும், மூன்று புத்திரிகளும் உளர். இவர் தேவபக்தியில் சிறந்த ஒரு உத்தமர். பரந்த ஞானமும் நிறைந்த அறிவும் பொருந்தியவர். தர்மசிந்தையும், பிறர் துக்கம் சகியாத இதயமும் படைத்தவர். வாழ்க்கைமுழுவதும் பிறருக்கு நன்மைபுரிவதிலேயே செலவழித்த பெருந்தகையாளன். பிறருக்கு நன்மைபுரிந்து உள்ளம்பூரிக்கும் புண்ணிய சீலன், அடக்கமும், அமைதியும் பூண்டு உலகிற்குத் தன்னைக்காட்டாது செத்தாரைப்போல வாழ்ந்த மகான். கத்தோலிக்க ஆசிரிய உலகில் வ. மு. யோண்பிள்ளை அவர்களைத் தெரியாதாரில்லை. எல்லா ஆசிரியர்களையும் தம்பால் கலந்துகொண்ட ஆற்றல் இவர் ஒருவருக்குமாத்திரம் உண்டென்பதை எவரும் மறக்கமுடியாது. ஆசிரியர்களிடத்தே சிறந்த செல்வாக்கும், உயர்ந்த மதிப்பும் உடையவர். நகைச்சுவைக் கதைகளைக் கூறி அடிவயிறுமட்டாகக் குலுங்கக் குலுங்கச் சிரிக்கவைக்கும் நகைச்சுவையாளன் வ. மு. யோண்பிள்ளை அவர்களை ஆசிரிய உலகம் எப்படித்தான் மறக்க முடியும்.

இவரின் பூதவுடல் யாழ்ப்பாணம், கல்லூரிலுள்ள மனையில்வைத்துத் துக்கம் கொண்டாடியபின், அன்று பிற்பகல் உறவினர், சிநேகிதர், பல ஆசிரியர்கள், மாணவமாணவிகள் கூடிய பிரலாப சமுகத்தில் வண. சுவாமி எவ். றெனே அவர்கள் தக்க சங்கீதப்பாடி எடுத்துச் செல்லப்பட்டு இறுதி மரியாதைகளுடன் பூமதானம் செய்யப்பட்டது. இவரை இழந்து தவிக்கும் பிள்ளைகள், மருகர், மற்றும் இனசனருடன் நாமும் அனுதாபப்படுகின்றோம்.

R. I. P.

---


## NOTICE

Mr. M. D. J. Nicholas Appuhamy of The Lanka Musical Works, Bopitiya, Pamunugama (formerly of Main Street, Jaffna) will be in Jaffna from 10th May, 1959 for a week or so, and will undertake repairing Musical Instruments such as Piano, Organ and Harmonium &c. Please apply:

"Mazenod House",
7, 4th Cross Street, Jaffna.


---

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

பரிசுத்த திருச்சிலுவையினதும், பச்சை உத்தரியத்தினதும் அருளினாலும், பரிசுத்த சதாசகாயமாதா, அர்ச். சூசையப்பர், அர்ச். அந்தோனியார், அர்ச். யூதாததேயு இவர்களின் மன்றாட்டினாலும் எனது தாயாருக்கும், மனைவிக்கும், மகள் எலனுக்கும் பூரண சுகம் கிடைத்ததற்கு எனது மனப்பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். பிரசுரதாமதத்திற்காக வருந்துகிறேன்.

வெள்ளவத்தை ஜே. எவ்.


## எமது கத்தோலிக்க பிரசுரங்கள்

| | ரூ. ச. |
|---|---|
| பாலர்குறிப்பிடம் ... | 40 |
| சின்னக் குறிப்பிடம் ... | 75 |
| பெரிய குறிப்பிடம் ... | 1-75 |
| மெய்விவாகக் குறிப்பிடம் ... | 05 |
| உறுதிப்பூசுதற் குறிப்பிடம் ... | 05 |
| சத்தியவேத தர்ப்பணம் போதகசாரம் (Part I) ... | 2-50 |
| எனது பூசைப் புத்தகம் திவ்வியபூசைஆராதனையை முழுதாய் அடக்கியது. | |
| கினேஸ் பேப்பர் ... | 5-00 |
| மோக்ஷபாதை (கலிக்கோ) ... | 4-50 |
| ,, (தோல்) ... | 7-00 |
| முத்திதிறவுகோல் (கலிக்கோ) ... | 2-50 |
| ,, (தோல்) ... | 3-50 |
| செபச்செண்டு ... | 85 |
| பிரசித்த ஆராதனையின் சாதாரண செபங்கள் ... | 2-00 |
| திவ்விய பூசையின் சாதாரண செபங்கள் ... | 40 |
| நித்திய ஆராதனை ... | 25 |
| இரா ஆராதனை ... | 25 |
| திருமணித்தியாலம் ... | 40 |
| திவ்வியபூசை மகத்துவம் ... | 2-50 |
| பூசை உதவி மந்திரம் ... | 40 |
| பூசை உதவி மந்திரம் (மட்டை) ... | 15 |
| வேதாகம வாசிப்பு ... | 90 |
| சற்பிரசாத அன்பன் ... | 20 |
| யேசுநாதரின் சுவிசேஷம் அல்லது நான்கு சுவிசேஷங்களின் ஒப்புமை ... | 2-50 |
| கிறீஸ்தவபோதகம் (Part I) ... | 1-25 |
| அர்ச். மார்க்கு சுவிசேஷம் ... | 1-25 |
| அர்ச். லூக்காஸ் சுவிசேஷம் ... | 1-50 |
| பசாம் ... ... | 1-05 |
| சிலுவைப் பாதை ... | 30 |
| மகா மனந்திரும்புதல் இயக்கப் பிரசங்கங்கள் ... | 1-00 |
| சுவிசேஷ விரித்துரை (பசாமுடன்) ... | 6-50 |
| (பசாமில்லாமல்) ... | 5-00 |
| கத்தோலிக்கு கீர்த்தனைமாலையின் 1-ம் பகுதி (கோட்டில்லாமல்) ... | 75 |
| தமிழ் 2-ம் பகுதி (கோட்டில்லாமல்) ... | 75 |
| இரண்டும்சேர்த்துக் கட்டியது (நோட்டில்லாமல்) ... | 1-50 |
| லத்தீன் (1-ம் பகுதி கோட்டுகளுடன்) ... | 2-25 |
| தமிழ் (2-ம் பகுதி கோட்டுகளுடன்) ... | 2-25 |
| தமிழ் லத்தீன் இரண்டும் (கோட்டுகளுடன்) ... | 4-75 |
| கிறீஸ்துநாதர் சரித்திர ஆராய்ச்சி ... | 75 |
| ஆண்டவர் சரித்திரம் (Part I) ... | 90 |
| ,, (Part II) ... | 90 |
| ,, (Part III) | 90 |
| திருஇருதய வணக்கமாதம் ... | 1-50 |
| தேவமாதாவின் வணக்கமாதம் ... | 1-50 |
| மரியாயின் மாசில்லாத இருதயப் பொக்ஷம் ... | 1-50 |
| அவர்கள் மூன்று சிறுவர்கள் (பாத்திமா) ... | 2-50 |
| கிறீஸ்துநாதரும் அவருடைய போதனைகளும் ... | 1-50 |
| நவதின உற்சவம் ... | 75 |
| தரும அப்பம் ... | 1-00 |
| பத்திச் சபைகள் ... | 20 |
| ஆத்தும தரிசனம் ... | 20 |
| தமிழரின் பூர்வசரித்திரம் ... | 50 |
| றெலேனு அல்லது திருக்காய அடையாளம்பெற்ற இலங்கைக் கன்னிகை சரித்திரம் ... | 35 |
| அர்ச். லூயிமேரி கிறிஞ்ஞோன் சிவிய சரித்திரம் ... | 40 |
| புதியஏற்பாட்டின் திருப்பலி ... | 20 |
| Oremus Book ... | 1·25 |
| ஆத்துமாக்களின் அழுகைக்குரல் ... | 1-55 |
| ஞானவொடுக்கப் பிரசங்கம் ... | 1-50 |
| இலங்கும் மகிமைமுடி ... | 80 |
| அர்ச். வாரம் ... | 95 |

அதிபர்,
சன்மார்க்கமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.


---

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, May 7-1959.